வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 12.09.2022 திங்கட்கிழமை | இதழ் : 277 | பக்கங்கள் : 16

# திருக்கோணேஸ்வரத்தை பாதுகாக்க இந்திய அரசாங்கத்தை நாடவும் முடிவு!

## சைவ அமைப்புகள்கூடி நேற்று எடுத்தன





யாழ்ப்பாணம், செப். 12

தொன்மை வாய்ந்ததும் - பாடல் பெற்ற தலமுமான திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய காணியை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடவும், பாராளுமன்றத்தில் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை என்ற பெயரில் திருக்கோணேஸ்வரம் ஆலய காணியை ஆக்கிரமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற தகவல் வெளியிடப்பட்டது.

இந்த ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நல்லூரிலுள்ள இந்து மாமன்றத்தின் அலுவலகத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் சைவ அமைப்புகளின் பிரதிநிதிகள் கூடி நேற்று

15

# பொருளாதார மையமாக வடக்கு மாகாணம் மாறும்!

## சமந்தா பவரிடம் ஜனாதிபதி உறுதி

- ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு சர்வதேச பொலிஸாரின் உதவி
- தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய பொறிமுறை
- காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு துரித தீர்வு
- 6 கோடி டொலர்களை அமெரிக்கா வழங்குவதற்கு உறுதி



கொழும்பு, செப்ரெம்பர் 12

பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழர்களை விடுதலை செய்வதற்கு பொறிமுறை ஒன்று வகுக்கப்படும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு துரித தீர்வு காணப்படும், மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகின்றது என்று அமெரிக்காவின் சமந்தா பவருக்கு தெரியப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாணத்தை பெரும் பொருளாதார மையமாக மாற்றப்படும் என்றும் கூறினார். அத்துடன், இது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைவிட எமக்கு அப்பகுதிகளில் அதிகம் பங்காற்ற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

15

# முடிந்தால் கட்சியிலிருந்து எங்களை நீக்கி காட்டுங்கள்!

## உண்மையான பெரமுன நாமே என்று ராஜபக்ஷ தரப்புக்கு டலஸ் அணி சவால்!

கொழும்பு, செப். 12

“உண்மையான சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள் நாங்கள்தான். முடிந்தால் கட்சியில் இருந்து எங்களை நீக்கிக் காட்டுங்கள்.”

- இவ்வாறு ராஜபக்ஷ தரப்புக்கு பகிரங்கமாக சவால் விடுத்துள்ளது டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மேலும் கூறுகையில்,

“நாட்டில் பிரச்னைகள் இன்னும் தீரவில்லை. ஆனால், இராஜாங்க அமைச்சு நியமனம் இடம்பெறுகின்றது. என்ன

15

# 10 அரச நிறுவனங்களை விற்பதற்கு அரசு முடிவு!

## அதிகூடிய நட்டமே காரணமாம்

கொழும்பு, செப். 12

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் மேலாண்மை அல்லது உரிமையை தனியார்மயமாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக 10 நிறுவனங்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது.

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் பரிந்துரைகளின்படி 55 அரசாங்க நிறுவனங்

15

# ஜனாதிபதியாக மகிந்தவை நியமிக்க கோட்டாபயவை கேட்டதாம் இந்தியா!

கொழும்பு, செப். 12

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்காமல் சபாநாயகர மகிந்த யாப்பா அபேவர்த்தனவை நியமிக்குமாறு என்னிடம் இந்தியா கேட்டது என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சிங்கள வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தனது வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவரை முக்கிய பிரமுகர்கள் பலரும் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

15



# ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை!

டுபாய், செப். 12

பானுக ராஜபக்ஷவின் அதிரடியான ஆட்டமும் பிரமோத் மதுஷான், வனிந்து ஹசரங்கவின் துல்லியமான பந்துவீச்சும் கைகொடுக்க பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்களால் வீழ்த்தி ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை அணி.

கடந்த சில ஆண்டுகளாக சாதாரண போட்டிகளிலேயே வெற்றிக்காகவே தடு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அமைச்சரவை விரைவில் விஸ்தரிக்கப்படும் என்ற செய்தியை பத்திரிகைகளில் அடிக்கடி காணமுடிகின்றது.

இந்த வாரம் புதிய அமைச்சரவை நியமிக்கப்படுகின்றது என்று பல வாரங்களாக செய்திகள் வருகின்றன.

நமது தலைவர்கள் "இனியும் பொறுக்க முடியாது" என்று கூறுவதை இந்த "விரைவில் அல்லது அடுத்தவாரம்" என்பது ஞாபகப்படுத்துகின்றது.

ஏன்தான் இப்படியோர் இழுத்தடிப்பு நடக்கின்றது என்பதை அறிய ஆளும் தரப்புடன் குறிப்பாக ஜனாதிபதி தரப்புடன் நெருக்கமான ஒருவரை கேட்டபோது அவர் கூறிய விடயங்களிலிருந்து சில விடயங்களை ஊகிக்க முடிந்தது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்ட பின்னர், சர்வ கட்சிகளிலும் இருந்து ஆட்களை இழுத்தெடுத்தாவது ஓர் அமைச்சரவையை நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி விருப்பம் கொண்டிருந்தார்.

அதற்காகவே அவர் பலருடனும் தனிப்பட்ட சந்திப்புக்களையும் தொடர்ந்து நடத்தினார். அந்தச் சந்திப்புக்களின்போது அவருடன் இணைந்துகொள்ள சம்மதம் தெரிவித்திருந்த பலரும் "இந்தா வருகின்றோம்" என்று கூறிக்கொண்டிருக்கின்றனரே தவிர, வருவதைக் காணவில்லை.

அப்படி வர விருப்பம் இருப்பவர்களுக்கும் வந்தால் தமது அரசியல் வாழ்க்கை எப்படி போய்விடுமோ என்ற ஒருவகை பயம் இருப்பதை உணர்ந்துகொண்ட ஜனாதிபதி, அதனை எப்படி கையாள்வது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கின்றாராம்.

எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் செல்லவிருக்கின்றார்.

இந்த இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள உலகம் எங்குமிருந்து தலைவர்கள் லண்டனுக்கு படையெடுக்க விருக்கின்றனர். அவர்களில் பலரை தனிப்பட்ட வகையிலும் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்று நம்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரிட்டனிலுள்ள தூதரகத்தை பணித்திருக்கிறாராம்.

அங்கே இந்தியப் பிரதமரைச் சந்திக்க வாய்ப்பு இருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

இதன் பின்னர் நாடு திரும்பும் ஜனாதிபதி, தமது நெருங்கிய நண்பரும் காலஞ்சென்ற ஜப்பான் பிரதமருமான அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜப்பானுக்கு செல்லவிருக்கிறார். எதிர்வரும் 27ஆம் திகதி இந்த இறுதிச்சடங்கு நடைபெறவிருக்கின்றது. இந்த இறுதிச்சடங்குக்காக செல்லும் அவர், அந்தச் சந்தர்ப்பத்தின்போது ஜப்பானுடனான இலங்கையின் உறவை மீண்டும் சீர்செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்.

தற்போது இரு தரப்பு உறவும் விரிசலடைந்து காணப்படுகின்றபோதிலும் ரணில் ஆட்சிக்கு வந்த பின்னர் ஜப்பான் ஏற்கனவே தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில், அந்த விஜயத்தின்போது அவர், நாட்டுக்கு மகிழ்ச்சிதரக்கூடிய சில செய்திகளுடன் தாயகம் திரும்புவார் என்று நம்பிக்கையுடன் இருக்கிறாராம்.

இவையெல்லாம், தற்போது மனதளவில் தடுமாற்றத்தில் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் சிலருக்கு, இந்த அரசாங்கத்தின்மீது குறிப்பாக ஜனாதிபதி ரணிலின் தலைமைமீது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் அது அவர்கள் தன்னை நோக்கி வருவதற்கு உதவும் எனவும் நம்பிக்கையோடு இருப்பதையும் அறிய முடிந்தது.

இதனால்தான் அமைச்சரவை நியமனம் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றதாம். அமைச்சரவை நியமனம், செயலாளர் நியமனம் எல்லாம் முடிந்த பின்னர் ரணில் முழுவீச்சில் களமிறங்கவிருக்கிறாராம். அவரின் அடுத்த இலக்கு நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைப்பது. நமது வார்த்தையில் சொல்வதானால் தனியாருக்கு விற்பது.

நாடு இன்று இத்தகைய பொருளாதார நெருக்கடியில் இருப்பதற்கு மூல காரணமே அரச நிறுவனங்கள் ஏற்படுத்தும் பாரிய நஷ்டமும் என்பதை சர்வதேச நாணய நிதியமும் கோடிட்டுக்காட்டியிருக்கின்றது. அவ்வாறு தனியார் மயப்படுத்த முயலும்போது வழக்கம்போல நமது அரச நிறுவனங்களின் ஊழியர்கள் பொங்கி எழுவார்கள் என்பதும் தெரிந்ததுதான். அப்படி நடக்கின்றபோது ரணிலின் மாமனார் ஜே. ஆரின் காலத்தில் நடந்த அரச ஊழியர் போராட்டமும் அதனை அவர் அடக்கிய விதமும் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி

# சம்பள முறைகேட்டுக்கு எதிராக இ.தொ.கா. தொழில்சங்க நடவடிக்கை

நுவரெலியா, செப். 12

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தில் முறைகேடு நடத்திய மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழில்சங்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட நுவரெலியா மற்றும் பதுளை பெருந்தோட்டங்களில் பணியாற்றும் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமான ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதில்லை என்றும் அவர்களின் வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும் முறைப்பாடு எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தின் போது, அவர்களுக்குப் பெரும் முறைகேடு இடம்பெற்றுள்ளமையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு உரித்தான தோட்டங்களில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. (ஐ)

## கோட்டாபயவை பாதுகாத்தவர் மேஜர் ஜெனரலாக தரம் உயர்வு

கொழும்பு, செப். 12

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பானவரும் இராணுவ விசேட அதிரடிப்படை அதிகாரியுமான மகிந்த ரணசிங்க பிரிகேடியர் தரத்திலிருந்து மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த ஜூலை 12ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றிய பின்னர் மாலத்தீவிலும் சிங்கப் பூரிலும் ராஜபக்ஷ தம்பதியர் தங்கியிருந்த காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியவர் மகிந்த ரணசிங்க ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## மகாகவி பாரதியாருக்கு வவுனியாவில் அஞ்சலி!

வவுனியா, செப். 12

மகாகவி பாரதியாரின் 101ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இதன்போது பாரதியாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தமிழருவி சிவகுமார் மற்றும் தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் சுப்பிரமணிய பாரதியாரின் தமிழ் பற்று மற்றும் சுதந்திர வேட்கை தொடர்பான கருத்துரைகளை ஆற்றியிருந்தனர்.

நகரசபையின் உபதலைவர் சு. குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் சந்திர குலசிங்கம், முன்னாள் நகரசபை உறுப்பினர் சேனாதிராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் சமூக ஆர்வலகர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

திருகோணமலை, செப். 12

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான கல்மெடியாவ தெற்கை சேர்ந்த 39 வயதான பியதிஸ்ஸ பண்டார என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை விறகு எடுக்கச் சென்றவர் மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததால் அவரை தேடிச் சென்றனர். ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து அவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிவபாலனுக்கு நேற்று அஞ்சலி!

முன்னாள் யாழ் மாநகர முதல்வர் அமரர் பொன். சிவபாலனின் 24ஆவது நினைவு தினம் சித்தங்கேணியில் அன்னாரின் இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் நடனேந்திரன், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் தங்க முகுந்தன், முன்னாள் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் மதியழக ராஜா, கல்வி நிறுவன முதல்வர் ச. ஐங்கரன் மற்றும் அமரரின் குடும்பத்தினர் அமரரின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, நினைவுப் பகிர்வும் இடம்பெற்றது. (ஐ)

# போதைக்கு அடிமையான சகோதரனால் வன்புணரப்பட்ட இளம்பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 12

போதைப்பொருளுக்கு அடிமையான சகோதரனால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட இளம் பெண் உயிரை மாய்த்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

20 வயதுடைய இளம் பெண்ணே உயிரை மாய்த்துள்ளார். அவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவித்த மூத்த சகோதரன் தனது சகோதரியை வன்புணர்வுக்கு உள்படுத்தியுள்ளார். அதனால் விரக்தியடைந்த சகோதரி குரல் பதிவில் நடந்தவற்றை பதிவு செய்து நண்பிக்கு அனுப்பிவிட்டு தனது உயிரை மாய்த்துள்ளார்.

மூத்த சகோதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. இதன்போது, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் உள்ளிட்ட உயிர்க்கொல்லி போதைப்பொருள் பாவனை இளவயதினரிடையே அதிகரித்துள்ளதனால் பல்வேறு சமூகப் பிறழ்வு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதுடன் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.09.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# தனிக் கட்சி அரசியலும் கூட்டு அரசியலும்?

அடுத்த ஆண்டு ஒருவேளை தேர்தல் வரக்கூடுமென்னும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுபோல் தெரிகின்றது. 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலானது மூன்று அணிகளுக்கான தேர்தல் அரசியலாகவே சுருங்கியிருக்கின்றது. இந்த அணிகளுக்கு இடையிலான பொது வேலைத்திட்டம் தொடர்பில் அவ்வப்போது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும்கூட இதுவரையில் அது சாத்தியப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் 2001இலிருந்து இயங்கிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வழமைபோல் தொடருமா அல்லது உதிருமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. அடுத்த தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து செல்ல வேண்டும் என்னும் கோரிக்கைகள் பொதுவெளிகளில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் பேசப்படுகின்றது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டுமென்னும் கோரிக்கையை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றும் - அதன் ஆரம்ப கட்சிகளில் ஒன்றுமான ரெலோ முன்வைக்கின்றது. ஆனால், இதற்கு இலங்கை தமிழ் அரசு கட்சியினர் மத்தியிலிருந்து சாதகமான பதில் வரவில்லை. ஆனால், அதனை மறுதலிக்கும் வகையிலேயே தனியாக செல்வது பற்றிய சிந்தனைகள் அதிகம் வெளிவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விவகாரத்தைப் பொறுத்த வரையில், ஆரம்பத்திலிருந்தே அதனை இலங்கை தமிழ் அரசு கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. இது தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் - தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்னும் பதிலையே சம்பந்தன் தொடர்ந்து கூறி வந்திருக்கின்றார். அடிப்படையில் சம்பந்தன் பதிவு விடயத்தை விரும்பவில்லை என்பதே உண்மை.

சம்பந்தனையும் தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினர்களையும் பொறுத்தவரையில் தமிழ் அரசு கட்சி ஒன்றுதான் அரசியலில் நிலைக்கக் கூடியது. தவிர, அது ஒரு பாரம்பரிய கட்சி. அத்துடன், தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதன் ஊடாகத்தான், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் மற்றும் டி. பி. எல். எவ் (புளொட்) போன்ற கட்சிகளால் வெற்றிபெற முடிகின்றது - வீட்டுச் சின்னத்தில் போட்டியிடாவிட்டால் இவர்களின் கட்சிகள் வெறும் பெயரளவு கட்சிகளாகவே இருக்கும் என்பதே தமிழ் அரசு கட்சியினரின் ஆணித்தரமான வாதமாகும். சுரேஷ் பிறேமசந்திரனால் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர், தனித்துத் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை என்பதும் தமிழ் அரசு கட்சியினரை உற்சாகப்படுத்தியிருந்தது. ஆனால், அண்மைக்காலமாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்ற நிலையில், தமிழ் அரசு கட்சி தனித்து செல்ல வேண்டுமென்னும் வாதம் சற்றுக் கூடுதலாகவே தலைதூக்கியிருப்பதாகத் தெரிகின்றது.

கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற இரா. சம்பந்தன் அரசியலில் இயங்க முடியாத நிலைமையிலிருப்பதே இந்த பிரச்னை இப்போது மீளவும் தலைதூக்குவதற்கான பிரதான காரணமாகும். ஏனெனில், சம்பந்தனுக்கு பின்னரான காலத்தில் கூட்டமைப்புக்கு என்ன நடக்கும் என்னும் கேள்வி பங்காளிக் கட்சிகள் மத்தியில் எழுந்திருக்கின்றது. - இதேவேளை, சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்பை வழமைபோல் தமிழ் அரசுக் கட்சியின் ஏக தலைமையின் கீழ் முன்கொண்டு செல்ல முடியுமா என்னும் அச்சமும் தமிழ் அரசு கட்சியிலுள்ள ஒரு சிலருக்கு ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் அரசு கட்சி தனித்து தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டுமென்னும் வாதம் தலைதூக்கியிருக்கின்றது.

இன்றைய காலத்தில் எவ்வாறான தலைமைத்துவம் தமிழ் மக்களுக்கு ஏற்புடையது? தனிக்கட்சி அரசியலா அல்லது, கூட்டணி அரசியலா? உண்மையில் நெருக்கடியான சூழலிலேயே அரசியல் கூட்டுக்கள் தொடர்பில் சிந்திக்கப்படும். 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் தனிக் கட்சி அரசியலுக்கான வாய்ப்புக்கள் பெருமளவு இருக்கவில்லை. கூட்டணியாக செயல்பட்டதன் மூலமே தமிழ் மக்களின் அரசியல் பலம் ஒப்பீட்டடிப்படையில் ஓரிடத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்புக்குள் பல்வேறு உள்பிரச்னைகள், முரண்பட்ட அணுகுமுறைகள் இருந்தபோதிலும்கூட கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலான தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்தை பேணிப் பாதுகாத்ததில் கூட்டமைப்புக்கு ஒரு வரலாற்று பங்குண்டு.

விமர்சனங்கள் இருப்பினும்கூட கூட்டமைப்பு முற்றிலும் இல்லாமல் போவதை பலரும் விரும்பியிருக்கவில்லை. இப்போதும் இந்த நிலைமையில் பெரியளவில் மாற்றங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கூட்டமைப்பைப் பதிவு செய்ய தமிழ் அரசு கட்சி தொடர்ந்தும் மறுத்தால் இந்தப் பிரச்னைகளை எவ்வாறு கையாளுவது? தமிழ்த் தேசிய அரசியல் எதிர்காலம் தொடர்பில் கரிசனையுள்ள அனைத்து தரப்புக்களும் இந்த விடயத்தில் கரிசனை கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலை வெறும் கட்சி அரசியலுக்கு அப்பால் எவ்வாறு இன்றைய காலத்துக்கு உகந்த வகையில் ஒரு ஜனநாயக தேசிய இயக்கமாக வடிவமைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# சிறுநீரகக் கற்கள் வராமல் தடுப்பது எப்படி?

*முறையற்ற உணவுப்பழக்க வழக்கத்தாலும் மாறிவரும் வாழ்வியலாலும் மனித உடலின் கழிவுகள் வெளியேறும் பாதையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சிறுநீரகக் கல் பிரச்னை இதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இது உடலில் கொடூரமான வலியை ஏற்படுத்த வல்லது என்கிறார்கள் மருத்துவர்கள்.*

**சிறுநீரகக் கல் என்பது என்ன?**

*சிறுநீரகம் அல்லது சிறுநீர்ப் பாதையில் அளவுக்கு அதிகமான யூரிக் அமிலம், கல்சியம் போன்ற தாது உப்புகள் தேங்குவதால் உருவாகும் கற்களுக்கு சிறுநீரகக்கற்கள் என்று பெயர்.*

**சிறுநீரகக் கல் ஏன் உருவாகிறது?**

*சிறுநீரில் அதிகமான யூரிக் அமிலம் இருந்தாலோ அல்லது கல் உருவாவதைத் தடுக்கும் காரணிகளான சிட்ரேட் ஆகியவை குறைவாக இருப்பதாலும் உருவாகின்றன. மொத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவுக்கும் தடுக்கும் அமிலங்களின் அளவுக்கும் இடையிலான விகிதம் இதில் முக்கியமான அம் சமாக இருக்கிறது.*

*சிலருக்கு சிறுநீரில் அதிகமான கல்சியம் இருப்பது, மரபு வழியாகவும் ஏற்படும். அதுபோக உணவுப் பழக்கம், தண்ணீர் குறைவாகக் குடிப்பது ஆகியவற்றாலும் இந்த பாதிப்பு ஏற்படலாம்.*

**சிறு நீரகக் கல்லின் வகைகள் என்ன?**

*பெரும்பாலான கற்கள் கல்சியம் வகையைச் சேர்ந்தவையாக இருக்கலாம். கற்கள் எந்தத் தாது உப்பை அடிப்படையாக கொண்டவை என்பதை பொறுத்து அவை வகைப்படுத்தப்படுகின்றன.*

*யூரிக் அமிலக் கற்கள்*
*சல்பேட் கற்கள்*
*மும்மைக் கற்கள்*
*சிஸ்டீன் கற்கள்*

**சிறுநீரகக் கல் இருப்பதற்கான அறிகுறிகள் என்னென்ன?**

*பெரும்பாலான சமயங்களில் எந்த அறிகுறியும் இருக்காது. ஸ்கேன் எடுக்கும்போதுதான் தெரியவரும். சிலருக்கு சிறுநீர் வெளியாகும்போது அதில் கல்லும் வெளியேறும். அப்போது வலி ஏற்படும். அந்த வலி பின் வயிற்றிலிருந்து பரவி வரும். சிலருக்கு சிறுநீரில் இரத்தமும் வெளியேறலாம். இதுபோன்ற அறிகுறிகள் மூலம் நாம் சிறுநீரகக் கற்கள் பாதிப்பை உணர முடியும்.*

**சிறுநீரகக் கல் வராமல் தடுப்பதற்கான வழிகள் என்னென்ன?**

*உணவை முறைப்படுத்துவதுதான் ஒரே வழி. பிரதானமாக உப்பு. நாள் ஒன்றுக்கு 5 கிராமுக்கு மேல் உப்பு சேர்த்துக்கொள்ளக் கூடாது. நிறைய தண்ணீர் பருக வேண்டும். புரதச்சத்துக்காக இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவுகளைவிட பயிறுகள், பருப்பு உள்ளிட்ட சைவ உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.*



**எந்தெந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்**

*சொக்லேட், கீரை, பருப்பு வகை (முந்திரி, பாதாம், பிஸ்தா) போன்றவற்றை உண்பது இந்த சிறுநீரக கல் உருவாவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும். ஆனால், எந்த உணவாக இருந்தாலும் அதிலிருக்கும் உப்பின் அளவுதான் பிரதானமான காரணி.*

**சிறுநீரகக் கல்லுக்கு அறுவைச் சிகிச்சை எப்போது தேவைப்படும்?**

*பொதுவாக 5 முதல் 6 மி.மீ விட்டமுள்ள கற்கள் இருந்தால் அவை சிறுநீர் வழியாகவே வெளியேறி விடும். அந்த சமயங்களில் சில அசௌகரியங்கள் ஏற்படலாம். அதற்கு மேல் அளவுள்ள கற்கள் என்றால் மேலதிக சிகிச்சைகள் அவசியம்.*

*அறிகுறிகள் இருந்தால் முதலில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கான் செய்ய வேண்டும். சிறுநீரகத்தில் இருக்கும் பெரிய கற்களை இந்த சோதனையில் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால், சிறிய கற்களாகவோ அல்லது சிறுநீர்ப்பையிலோ இருந்தால் சிடி ஸ்கான் செய்ய வேண்டி வரும். இதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கல்லின் அளவு மற்றும் இடத்தை பொறுத்து லேசரோ அல்லது அறுவை சிகிச்சையோ செய்ய வேண்டி வரும்.*

**இயற்கையாகவே இதை கரைக்க வாய்ப்புண்டா?**


*உணவுப்பழக்கமும் தொடர்ச்சியாக தண்ணீர் அருந்தும் பழக்கமுமே இந்த கற்களை கரைக்கப் போதுமானது. முறையான உப்பு அளவும், தேவையான அளவு தண்ணீரும் இருந்தால் கற்களை கரைப்பது எளிமையானது.*

*உறங்குவதற்கு முன், நிச்சயம் தண்ணீர் குடிக்க வேண்டும். அந்த சமயங்களில் தான் உடலில் நீரிழப்பு அதிகம் ஏற்படும்.*

**நிறைய தண்ணீர் குடித்தால் பின்விளைவுகள் உண்டா?**

*ஒரு சிலர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் ஏராளமாக தண்ணீர் அருந்துவது உண்டு. ஆனால், ஆண்டுக்கணக்கில் இப்படி தண்ணீர் குடிப்பது தொடர்ந்தால், அது சிறுநீரகத்தின் செயல்பாடுகளை நீர்த்துப் போகச் செய்யும். குறிப்பாக, இரத்தத்தில் இருந்து தேவையான நீரை பிரித்து எடுக்கும் தன்மை சிறுநீரகத்தில் குறைய வாய்ப்பு உண்டு.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
திடீர் செலவுகளை சந்திப்பீர்கள். ஒரு சிலர் குடும்பத்துடன் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை.

**இடபம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர் வழியே லாபம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்**
புதிய தொழில் தொடங்குவது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். அந்நியரின் உதவியுடன் நீண்ட நாள் பிரச்னை ஒன்றில் தீர்வு காண்பீர்கள். பெற்றோர் வழியே லாபம் ஏற்படும்.

**கடகம்**
குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திட்டமிட்ட செயல் வெற்றி காண்பீர்கள். சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். குல தெய்வ அருளால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

**சிம்மம்**
உங்கள் செயல்களில் இழுபறி உண்டாகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தடுமாறும். அமைதி காப்பது நல்லது. பயணத்தில் எச்சரிக்கை தேவை. வாகனத்தின் வழியே செலவு ஏற்படும்.

**கன்னி**
நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை தீரும். வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி காண்பீர்கள். மற்றவர் ஆதரவுடன் உங்கள் எண்ணத்தை நிறைவேறும்.

**துலாம்**
உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடம் விலகும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றியைக் காண்பீர்கள். தடைகளை நீக்கி செயல்படுவீர்கள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும்.

**விருட்சிகம்**
திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல தகவல் வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பெற்றோர் ஆதரவுடன் நீங்கள் எண்ணியதை இன்று நிறைவேற்றி மகிழ்வீர்கள். பூர்வீக சொத்து பற்றிய பேச்சு எழும்.

**தனுசு**
மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். நீங்கள் விரும்பியதை இன்று அடைவீர்கள். செயல்களில் தடைகளை சந்திப்பீர்கள். வீண் செலவு அதிகரிக்கும்.

**மகரம்**
யோகமான நாள். பொதுநலப்பணியில் விமர்சனத்திற்கு ஆளாவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். உங்கள் எண்ணத்தை சகோதரர்கள் உதவியுடன் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தில் பண நெருக்கடியை சரி செய்வீர்கள். தைரியத்துடன் நினைத்ததை செய்வீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.

**மீனம்**
புதிய சிந்தனை மேலோங்கும். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் போவார்கள். அமைதி தேவை. குடும்பத்தினருடன் வெளியில் சென்று வருவீர்கள். உங்கள் முயற்சி பலித்தமாகும்.

# பழ. நெடுமாறன் உட்பட 100 பேர் நேற்று கைது!



சென்னை, செப். 12

தமிழக ஆளுநர் திருக்குறளை அவமதித்தார் என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்ட பழ. நெடுமாறன், திருமுருகன் காந்தி, பழ. கருப்பையா உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

தமிழக ஆளுநர் ஆர். என். ரவி ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருக்குறள் குறித்து பேசினார். அவர் திருக்குறளை அவமதித்தார் என்று குற்றம் சாட்டி பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், திருக்குறளை அவமதித்த ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழ் அமைப்புகள் சார்பில் அறிவிக்கப்பட்டது. நேற்று காலை ஆளுநரைக் கண்டித்து சைதாப்பேட்டை பனகல் மாளிகை முன்பு பழநெடுமா றன் தலைமையில் ஏராளமா னோர் திரண்டனர். இதில் முன் னாள் சட்டமன்ற உறுப்பினர் கள் பழகருப்பையா எம்.ஜி.கே. நிஜாமுதீன், ஆம்ஆத்மி ஒருங்கிணைப்பாளர் வசீகரன், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவர்கள் கவர்னருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். பின்னர் ஆளுநர் மாளிகை நோக்கி ஊர்வலமாக செல்ல முயன்றனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். தடையை மீறி கவர்னர் மாளிகை நோக்கி செல்ல முயன்ற பழநெடுமாறன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# தேர்தல் வாக்குறுதிகளை தி. மு. க. நிறைவேற்றவில்லை!

## எடப்பாடி பழனிசாமி சாடல்



சென்னை, செப். 12

தி. மு. கவின் தேர்தல் வாக்குறுதிகள் எதையும் இதுவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர்,

எவ்வளவோ தடைகளை தாண்டி அ. தி. மு. க. தொண்டர்கள் ஆதரவோடு கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக விவசாயியான நான் பொறுப்பேற்றது விவசாயிகளுக்கு கிடைத்த வெற்றி.

விவசாயிகளுக்கு முழு சுதந்திரம் அளித்த அரசு அ. தி. மு. க. அரசு. ஒரு சொட்டு குடிநீர் கூட வீணாக்கப்படாமல் இருப்பதற்காகத்தான் குடிமராமத்து பணிகள் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதுவும் தற்போது நடைபெறவில்லை. இந்த அறிவிப்பு தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்தது. ஆனால், தற்போது வரை தி. மு. க. அரசு தேர்தல் வாக்குறுதிகள் எதையும் இதுவரை நிறைவேற்றவில்லை - என்றார். (ஐ)

# ராகுலின் நடை பயணம் தமிழகத்தில் நிறைவு!

சென்னை, செப். 12

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம். பி. தமிழகத்தில் தனது 4 நாள்கள் நடைபயணத்தை நிறைவு செய்தார். இதையடுத்து, அவரின் நடைபயணம் கேரள மாநிலத்தில் நேற்று தொடங்கியது.

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 3,500 கி.மீ. தொலைவு நடைபயணத்தை கடந்த புதன்கிழமை (செப். 7) ராகுல் காந்தி தொடங்கினார். 3ஆம் நாளான வெள்ளிக்கிழமை இரவு முளகுமூடு பகுதியில் தங்கினார்.

4ஆம் நாள் நடைபயணத்தை முளகுமூட்டிலிருந்து அவர் சனிக்கிழமை தொடங்கினார்.

நடைபயணத்தின்போது சாலையின் இருபுறமும் தொண்டர்கள், பொதுமக்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். வீட்டு மாடிகளிலிருந்து ஏராளமான பெண்கள், சிறுவர்கள் ராகுலைப் பார்த்து கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஒவ்வொரு சந்திப்பிலும் அவருக்கு செண்டை மேளம், சிங்காரி மேளம், மயிலாட்டம், ஒயிலாட்டத்துடன் வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை தமிழகத்தில் அவரின் பயணம் நிறைவடைந்தது. (ஐ)

# கருணாநிதியின் கடிதங்கள் நூலகின்றது!

சென்னை, செப். 12

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கடிதங்கள் நூல்களாக தொகுக்கப்பட்டு, திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி. மு. க.) முப்பெரும் விழாவில் வெளியிடப்படவுள்ளன.

தி. மு. கவின் தலைவராகவும், முதல்வராகவும் இருந்த கருணாநிதி, கட்சியினருக்கு எழுதிய ஆயிரக்கணக்கான கடிதங்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன. மொத்தமாக 4 ஆயிரத்து 41 கடிதங்கள் அடங்கிய கடிதங்கள் 54 தொகுதிகளாக தயாராகியுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில் வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள முப்பெரும் விழாவின் போது நூலை தி. மு. க. தலைவரும் முதல்வருமான மு. க. ஸ்டாலின் வெளியிடவுள்ளார். தி. மு. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் முதல் பிரதியை பெற்றுக் கொள்ளவுள்ளார். (ஐ)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை தனியாரிடமிருந்து மீட்க நடவடிக்கை வேண்டும்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 12

**தனியாரிடம் சிக்கியுள்ள தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையம் வட மாகாண கல்வியமைச்சின் நேரடி கண்காணிப்பில் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.**

வட மாகாணத்தில் போதிய ஆசிரிய ஆளணியிருந்தும், வட மாகாண கல்வித் திணைக்களத்தின் சட்டதிட்டங்களுக்கோ, நிதிப்பிரமாண நடவடிக்கைகளுக்கோ உட்படுத்த முடியாத, எந்தவொரு கணக்காய்வு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்த முடியாத, தனியார் நிறுவனமாக பதிவுசெய்யப்பட்ட தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வினாத்தாள்களை தவணைப் பொதுப் பரீட்சைகளாக நடத்துவதற்கு, வட மாகாண கல்வித் திணைக்களம் அனுசரணை வழங்குவது சட்ட விரோதமான செயல்பாடாகும்.

இந்த சட்டவிரோத செயல்பாடுகளை முறையற்ற விதத்தில் ஊக்குவித்து, ஆசிரியர்களையும், பாடசாலைகளையும் தவறான விதத்தில் வட மாகாண கல்வித் திணைக்களம் வழி நடத்தி வருகிறது.எனவே, தனியாரிடம் சிக்கியுள்ள குறித்து தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையம் வட மாகாண கல்வியமைச்சின் நேரடி கண்காணிப்பில் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கு எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் விளக்கமளிக்குமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் மின்னஞ்சல் மூலம் வட மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார். (ஐ)



# மகாகவி பாரதியாரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 101ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூர் - அரசடியில் பாரதியாரின் உருவச்சிலை முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம் கே சிவாஜிலிங்கம், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் நடனேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஐ)

# யாழ். பல்கலையில் உலர் வலய விவசாய மாநாடு!

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய பீடம் வருடாந்தம் நடத்தும் உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாடு கிளிநொச்சி - அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாயபீடம், வடக்கு - கிழக்கை மையப்படுத்தி உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாட்டை கடந்த 2015ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வருடாந்தம் நடத்தி வருகின்றது.

“உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்“ என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. (ஐ)

# கோதுமை மா உற்பத்திகளின் விலை உயர்வை நிறுத்துங்கள்!

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 12

பாண் உட்பட கோதுமை மா சார்ந்த உற்பத்திகளுக்கான விலை அதிகரிப்பை நிறுத்துமாறு வெதுப்பக உரிமையாளர்களை வர்த்தக அமைச்சு கேட்டுள்ளது.

துருக்கி மற்றும் துபாயில் இருந்து கடன் அடிப்படையில் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டுத் தேவைகள் காரணமாக ஏற்றுமதி செய்வதில்லை என்ற முடிவைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கோதுமை மா இறக்குமதிக்கான கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வரை அடுத்த இரண்டு வாரங்களுக்கு விலை அதிகரிப்பை நிறுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேநேரம், கோதுமை மாவின் விலை அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு பாண் மற்றும் மா அடிப்படையிலான பொருட்களின் விலையை அதிகரிக்க வெதுப்பக உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக தீவகத்தில் கையொப்பம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 12

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் இரண்டாவது நாளாகவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது .

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியான வேலணையில் நேற்று இந்தப் பணி இடம் பெற்றது

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த ஊர்தி போராட்டம் 25 மாவட்டங்களுக்கும் சென்று அம்பாந்தோட்டையை சென்றடையவுள்ளது.



வேலணையில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றிஅஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை நேற்று வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மிலேச்சத்தனமான செயல்களை அரசாங்கம் முன்னெடுக்கின்றது

## எதிர்க் கட்சித் தலைவர்

கொழும்பு, செப். 12

மிலேச்சத்தனமான செயல்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கடந்த மே 9ஆம் திகதி அரச வன்முறையை முன்னெடுத்த ராஜபக்சர்கள் மற்றும் அந்த கும்பல்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், நடிகை தமிதா என்பவர் மிகவும் புகழ்பெற்ற அதேபோன்று தனது நடிப்புத் திறமையால் பல சன்மானங்களை பெற்றுக்கொண்ட நடிகையாவார்.

எந்த சந்தர்ப்பத்திலும் இவ்வாறான திறமையாளர்கள் ஜனநாயக விரோத செயல்பாடுகளினூடாக தங்களது கருத்துக்களை தெரிவிப்பதில்லை. ஜனநாயக விரோத செயல்பாடுகளில் ஈடுபடுவதும் இல்லை.

நடிகை தமிதா எந்த சந்தர்ப்பத்திலும் ஜனநாயகத்துக்கு விரோதமாக பயணித்தவர் அல்ல. அவர் தனது எதிர்ப்பை தெரிவித்திருக்கக் கூடும். எனினும் அவர் ஜனநாயக விரோத செயல்பாடுகளில் ஈடுபடவில்லை.

நாட்டு மக்களுக்காகவே அவர் குரல் கொடுத்தார். நாட்டு மக்களுக்காகவே வீதிக்கு இறங்கி போராடினார். நாட்டு மக்களுக்காக குரல் கொடுத்த ஒரு தலைவியாகவே அவரை நாம் பார்க்கின்றோம்.

எந்த காரணத்தை அடிப்படையாக வைத்து நடிகை தமிதா அபேரத்னவை பழிவாங்குகின்றார்கள் என்றே அரசாங்கத்திடம் நாம் கேட்கின்றோம். இது உண்மையில் வேட்டையாடும் செயலை போன்றது.

மே ஒன்பது வன்முறையுடன் தொடர்புடைய ராஜபக்ஷர்களுக்கு எதிரான விசாரணைகள் எங்கே? மாறாக தமிதா அபேரத்னவை போன்ற கலைஞர்கள், இளைஞர், யுவதிகளை கைது செய்வதன் மூலம் அரச மிலோச்சத்தனத்தை காட்டுவதையே அரசாங்கம் செய்து வருகின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார். (கே)

# தெரிவு செய்யப்பட்ட எங்கள் தலைவர்கள் மக்களுக்கு சேவை செய்ய தவறிவிட்டனர்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சாடல்

வவுனியா, செப். 12

**மனித உரிமைகள் தொடர்பான பெரும்பாலான முடிவுகள் உறுப்பு நாடுகளின் தலைநகரில் எடுக்கப்படுகின்றன. ஜெனிவாவில் அல்ல. எங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து அல்லது நெதர்லாந்துக்கு சென்றதில்லை. அவர்கள் தமிழர்களுக்கான சேவையை செய்ய தவறிவிட்டார்கள் என வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொட்டகையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு கூறினர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை கண்டறியவும் தமிழ் இறையாண்மையை பெறவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உதவிக்காக காத்திருக்கும் இந்த குடிசையில் எமது தொடர் போராட்டம் இன்று (நேற்று) 2029 நாளாகும்.

திங்கட்கிழமை (இன்று) ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு ஆரம்பமாகும். நமது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்பு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் தமிழர்கள் சார்பாக பிரசாரம் செய்யத் தவறிவிட்டனர்.

மனித உரிமைகள் தொடர்பான பெரும்பாலான முடிவுகள் உறுப்பு நாடுகளின் தலைநகரில் எடுக்கப்படுகின்றன. ஜெனிவாவில் அல்ல. எங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து அல்லது நெதர்லாந்துக்கு சென்றதில்லை. அவர்கள் தமிழர்களுக்கான சேவையை செய்ய தவறிவிட்டார்கள்.

தமிழர்களின் கோரிக்கையை முன்னிறுத்தி முன்பிரசாரம் செய்யாமல் ஜெனிவா செல்வது, நோய்வாய்ப்பட்ட ஒருவரைப் புறக்கணித்து, அவரது இறுதிச் சடங்குக்கு செல்வதைப் போன்றதாகும்"- என்று தெரிவித்தனர். (ஐ)

# அரசியல் கைதிகள் தண்டனைக்குள்ளான குற்றச்சாட்டுகளின் விவரங்கள் தேவை!

## உறவினர்களை கோரினார் விக்னேஸ்வரன் எம். பி.

யாழ்ப்பாணம்,செப். 12

அரசியல் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள், அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டுள்ளன அல்லது தடை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்ற விவரங்களை எடுத்துத் தாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.



தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களுடனான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்கள் பயணம் எமது தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் கொடுப்பதாக என்று முதற் கண் வாழ்த்துகின்றேன். எனினும், அவர்களுக்கு நன்மைகள் உடனேயே கிடைத்துவிடும் என்று எண்ணுவதைத் தவிருங்கள்.

காரணம், எவ்வளவுதான் ஜனாதிபதியானவர் எமக்கு உத்தரவாதங்களையும், உறுதி மொழிகளையும் தந்தாலும் அவர் இன்னோர் இனச் சார்புடைய கட்சியின் ஆதரவை எதிர்பார்த்தே இருக்கின்றார் என்பதை நீங்கள் மறந்து விடலாகாது. அவர்கள் இவரைப் பாவிக்கின்றார்கள். இவர் அவர்களைப் பாவிக்கின்றார். இதுதான் இன்றைய நிலை.

இருந்தும் நாம் எமது கடமைகளைக் கச்சிதமாக நடத்திச் செல்ல ஆயத்தமாக வேண்டும்.

ஒன்று, எமது சிறைக் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள் அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டுள்ளன அல்லது தடை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்ற விவரங்களை எடுத்துத் தாருங்கள்.

இரண்டு, தண்டனை பெறப்பட்டவர்களின் வழக்குகளில் எத்தனை பேர் வெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளார்கள், எத்தனை பேர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் சேர்த்து வேறு சாட்சியங்களின் அடிப்படையிலும் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர், மற்றும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களே இல்லாமல் வேறு சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளார்கள் என்ற விபரங்களை எடுத்துத் தாருங்கள்.

மூன்றாவதாக, சிறையில் வாடும் ஒவ்வொரு தமிழ் அரசியல் கைதியும் தற்போது என்னென்ன குறைகளை, குறைபாடுகளை, பாதிப்புக்களை எதிர்நோக்கி உள்ளார்கள் என்பன பற்றிய விவரங்கள்.

இந்த விவரங்களை முன் வைத்து நீதியமைச்சருடன் நான் வேண்டுமெனில் பேச இருக்கின்றேன். ஆகவே கூடிய விரைவில் இந்த விவரங்களை எனக்கு எடுத்துத் தாருங்கள்.

அசோக டீ சில்வா அறிக்கையானது நான் எவ்வளவு தேடியும் எனக்குக் கிடைக்கவில்லை. அதன் பிரதி எனக்கு வேண்டும். அதில் கூறப்பட்டிருக்கும் 38 பேரும் 2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்று அறிகின்றேன்.

அப்படியானால் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒருவர்கூட நாம் கொடுத்திருக்கும் 46 பேர்களில் அடங்கமாட்டார்களா என்ற விவரம் தேவை. தற்போது அந்த 38 பேரை விடுவிக்கலாம் என்ற கருத்து அரச தரப்பினரிடையே மேலோங்கி நிற்பதாக அறிகின்றேன்.

அப்படியானால் பல வருட காலங்கள் சிறையில் வாடும் 46 பேருக்கும் எந்த வித நன்மைகளும் கிடைக்காமல் போய்விடுமா? இது பற்றி பேசுவதானால் மேற்குறிப்பிட்ட அசோக டீ சில்வா அறிக்கை என் கைகளுக்குக் கிடைக்க வேண்டும். -என்றார். (அ)

# கோட்டாபய விடயத்தில் கட்சியே முடிவு எடுக்கும்!

## இராஜாங்க அமைச்சர் மஸ்தான்

வவுனியா, செப். 12

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் கட்சியே முடிவு எடுக்கும் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.



வவுனியா, மருக்காரம்பளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் உணவு உற்பத்தியில் நெருக்கடி ஏற்படும். எனவே உணவு உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கேற்ற திட்டங்களை தயாரித்து அதனை எமது அமைச்சின் ஊடாக உயர்த்த வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரிக்க செய்ய முடியும். இதற்கான வேலைத்திட்டங்களை எமது அமைச்சு முன்னெடுக்கவுள்ளது - எனத் தெரிவித்தார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வருகை தந்து ஏதாவது பதவிகளைப் பெறுவரா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் கட்சி எடுக்கின்ற முடிவைப் பொறுத்தே செயல்பாடுகள் அமையும். தற்போதைய நிலையில் முன்னாள் ஜனாதிபதி தன்னால் முடிந்த முயற்சிகளையும் நாட்டுக்காக செய்வேன் எனத் தெவித்துள்ளார். அதனால் கட்சிதான் அது தொடர்பில் முடிவு எடுக்கும் - என்றார். (ஐ)

# துன்னாலை காளிகாம்பாள் ஆலய மகா கும்பாபிசேகம் நேற்று நடந்தது!

வடமராட்சி, செப். 12

துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான நூதன புனர்ருத்தன சம்பரோஷண மகா கும்பாபிசேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



கடந்த வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகின. தொடர்ந்து காளி அம்பிகை, விநாயகர், முருகன், வைரவர் போன்ற நூதன விக்கிரகங்கள் கிராமத்தை வலம் வந்தன. பின்னர் மாலை கிரியைகள் நடைபெற்றன. நேற்று முன்தினம் சனிக்கிழமை (காலை 8.00 மணியிலிருந்து எண்ணைக்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு மாலை கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி பிரதமை திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணி 03 நிமிடம் முதல் 10 மணி 33 நிமிடம் வரையான சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிசேகம் இடம்பெற்றது.

கும்பாபிசேக கிரியைகளை பிரதிஷ்டாகுரு கிரிய கிரம ஜோதி சிவாச்சாரியார் திலகம் சிவஸ்ரீ. ராம் சபாநாதக் குருக்கள், கிரிய ஜோதி சிவஸ்ரீ. துஷ்யந்த குருக்கள் ஆகியோர் மேற்கொண்டனர். (ஐ-2)

# பயண சீட்டுகளுக்கு தட்டுப்பாடு! பழையதை பயன்படுத்த முடிவு!

கொழும்பு, செப். 12
புகையிரத பயணச் சீட்டுக ளுக்கு தட்டுப்பாடு நிலவுவது டன், குறித்த பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக, ஏற்கனவே அச்சிடப்பட்ட பழைய பயணச் சீட்டுகளை பயன்படுத்துவதற்கு புகையிரதத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக திணைக் களத்தின் அத்தியட்சகர் வஜிர பொல்வத்த தெரிவித்தார்.
தெற்கு ரயில் பாதையில் ரயில் பயண சீட்டுகளுக்கு தட்டுப்பாடு உள்ளது.
எனவே, பயன்படுத்தப்படாத பயணச் சீட்டுக்கள் சேவைக்கு பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நலத்திட்ட உதவி பெறுவோரை மீண்டும் பதியுமாறு அறிவிப்பு!

## மருதங்கேணி செயலகம் விடுத்தது

வடமராட்சி, செப். 12
அரச நலத்திட்ட உதவிகளை பெறுபவர்களை மீளப்பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.
2022ஆம் ஆண்டுக்கான அரச நலன்புரி நன்மைகள் சபையின் நலத்திட்ட உதவித் தொகைக ளைப் பெறுவதற்கு தகுதியான நபர்களை அடையாளம் காணும் பொருட்டே மீளப் பதிவு செய்யு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
2002 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கத்தைக் கொண்ட நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுக ளுக்கு அமைவாக சகல நலன்புரி நிவாரண நன்மைக் கொடுப்பன வின் பொருட்டு தகுதியான நபர் களை அடையாளம் காணுவதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைபடுத்துவதற்கு அர சாங்கம் தீர்மானித்துள்ளது.
இதன் பிரகாரம் ஏற்கனவே பயனடைந்து கொண்டிருந்தால் அல்லது அரசாங்கம் செயல் படுத்தும் சமுர்த்தி கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, மாற்று வலுவுள்ளோர் கொடுப்பனவு, சிறுநீரக நோய் கொடுப்பனவு, பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு போன்ற ஏதேனும் ஒரு நலத்திட்டத்தின் கீழ் பயன டைய தகுதியடையவராயின் விண்ணப்படிவத்தை https://wbb.gov.lk/test/en/Documents/Dowunload/Benefisary_Form_tamil.pdf என்ற இணையத்தளத் தில் பிரவேசித்து தரவிறக்கம் செய்து அதனை முழுமையாக பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், சமுர்த்தி அலு வலர், அபிவிருத்தி உத்தியோகத் தர், சமூக சேவை உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் மேம் பாட்டு உத்தியோகத்தர் சான்றுப டுத்தி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சம்பந் தப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஐ-2)

# காணி பிரச்னையால் அண்ணன் கொலை!

கொழும்பு, செப். 12
சகோதரர்களுக்கு இடையி லான தகராறு கத்திக்குத்தில் முடிந் ததில் ஒருவர் படுகொலையானார்.
மாத்தறை - அக்குரஸை பொலிஸ் பிரிவின் மாதொல பிரதே சத்தில் இடம்பெற்றுள்ளது.
இதில், 47 வயது நபரே உயிரிழந் தார். சகோதரர் இருவருக்கு இடையிலான காணி பிரச்னையே படுகொலைக்கு காரணம் என்று தெரியவந்துள்ளது.
சந்தேக நபர் தப்பி சென்றுள்ள நிலையில் அவரை கைதுசெய்வ தற்கான நடவடிக்கையில் பொலி ஸார் ஈடுபட்டு வருகின்றனர். (கே)

# மின்சார சபைக்கு நுகர்வோர் 1,460 கோடி ரூபாய் நிலுவை!

## செலுத்தாவிடின் நடவடிக்கை

கொழும்பு, செப். 12
**வீடுகள், வணிக நிறுவனங்கள், மற்றும் பிற நிறுவனங்கள், அரச நிறு வனங்கள் என இலங்கை மின்சார சபையின் நுகர்வோர் 1,460 கோடி ரூபாயை நிலுவையாக வைத்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.**

இந்த நிலுவையானது கடந்த ஜூன் 30ஆம் திகதி வரைக்குமானது என்றும் அறிய வருகின் றது.
இலங்கை மின்சார சபை தகவல்களின்படி, 956 கோடி ரூபாய் நிலுவை சாதாரண வீட்டு வகையைச் சேர்ந்தவை. மொத்த வழங் குநர்களிடமிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூ. 450 கோடி. இதில் ரூ. 210 கோடி ஒரு வரு டத்துக்கும் மேலாக செலுத்தப்படவில்லை.
தற்போதைய பொருளாதார நெருக்கடி யால் மின்சார சபையின் தினசரி நடவடிக் கைக்கு நிலுவைத் தொகையை வசூலிப்பது இன்றியமையாததாக இருப்பதால், மின்சார நுகர்வோர் தங்கள் நிலுவைத் தொகையை விரைவில் செலுத்த வேண்டும் என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.
பல கட்டண வகைகளின் கீழ் மொத்த விநியோகத் துறைக்கும் மின்சார சபை மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. தொழில் துறை கள், சுகாதாரம், ஆயுதப்படைகள், பொலிஸ் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்ற துறைகள் இதில் அடங்கும்.
ஜூன் 30 ஆம் திகதிக்குள், தொழிற்சாலை கள் செலுத்த வேண்டிய பண நிலுவை ரூ. 270 கோடி. அடுத்த அதிகபட்ச நிலுவைத் தொகை யான ரூ. 87 கோடி அரச நிறுவனங்கள் செலுத்த வேண்டியுள்ளது. இந்தத் தொகை இராணு வம், பொலிஸ், சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள், கல்வி, உள்ளூராட்சி மற்றும் ரயில்வே ஆகியவற்றிலிருந்து செலுத்த வேண் டியுள்ளது.
ரூ. 69.7 கோடி ஹோட்டல்கள் அல்லது பொது நோக்கப் பிரிவைச் சேர்ந்த சிறிய நிறுவ னங்கள் செலுத்த வேண்டியுள்ளன. சுற்றுலா ஹோட்டல்கள் ரூ. 19. 6 கோடி செலுத்த வேண்டும். மத நிறுவனங்கள் ரூ. 2. 5 கோடி செலுத்த வேண்டும். மொத்த வழங்கல் பிரிவின் கீழ் குறிப்பிட்ட சில முக்கிய வழிபாட்டுத் தலங் களின் மின்சாரக் கட்டணங்கள் இதுவரை மின் சார சபையால் செலுத்தப்பட்டு வருகின்றன. மற்ற அனைத்து மத வழிபாட்டுத் தலங்களி லும் மின் கட்டணம் தற்போது சிறிய அளவில் உள்ளது. எவ்வாறாயினும், இந்த வசதி ஒக்ரோ பர் 1 முதல் இடைநிறுத்தப்பட் டுள்ளது.
மேலும் மத வழிபாட்டுத் தலங்கள் தங்க ளின் மின் கட்டணத்தை அவர்களே செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மின்சார சபை கட்டணத்தை அதிகரித்துள்ள நிலையில், மத நிறுவனங்களுக்கு 500 சதவீதத் துக்கும் அதிகமான கட்டண உயர்வு விதிக்கப் பட்டுள்ளது. "குறைந்த கட்டணத்தின் காரண மாக, பல மத நிறுவனங்கள் எந்தப் பொறுப் பும் இல்லாமல் ஒரு நாளைக்கு 24 மணி நேர மும் மின்குமிழ்களை எரிய விடுகிறார்கள்" என்று மின்சாரசபை உயர் அதிகாரியொருவர் குற்றம் சாட்டினார்.
சாதாரண வீட்டுப் பிரிவைச் சேர்ந்த நுகர் வோர் தங்கள் கட்டணத்தைச் செலுத்த ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# கோட்டாபயவை சந்தித்த ஜனாதிபதி!

கொழும்பு, செப். 12
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன் னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வை மலலசேகர மாவத்தையில் உள்ள அவரின் இல்லத்துக்கு சென்று சந்தித்துள் ளார்.
இந்தச் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாக அறியப்படுகிறது.
இருவருக்கும் இடையில் குறுகியநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதி பதி கேட்டறிந்தார் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

# அரசியல் கைதிகளை பார்வையிட செல்லும் உறவுகளுக்கு வரவேற்பு!

வவுனியா, செப். 12
நீண்ட நாட்களுக்கு பின்னர் அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்காக கொழும்பு நோக்கி பயணிக்கும் அரசியல் கைதிகளின் உறவுகளை வவுனியாவில் வரவேற்று உணவளித்து வழியனுப்பி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.
பல வருடங்களாக உறவுகளை சந்திக்காமல் சிறையில் வாடும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அரசியல் கைதி களை பார்வையிடுவதற்காக யாழ்ப்பா ணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த அரசியல் கைதிகளின் உறவுகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.



"உறவுகளுக்கு கரம் கொடுத்து உயிர்ப்புடன் சிறை மீட்போம்" எனும் தொனிப்பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒழுங்கு படுத்தலில் நேற்றுமுன்தினம் மாலை வவுனியா கந்தசுவாமி கோவிலுக்கு வருகைதந்த அரசியல் கைதிகளின் உறவுகளை வரவேற்று சிறப்பு வழிபாடுகளுடன் உபசரித்து வழியனுப்பும் நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலை வர் செ.சந்திரகுமார் (கண்ணன்) மற்றும் வவுனியா கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை செயலாளர் பா.சுந்தர்ராஜன் (குமார்) உள்ளிட்ட சமூக ஆர்வலர்களும் பங்கேற்றனர்.
வருகைதந்த அரசியல் கைதிகளின் உறவுகள் தமக்கு வவுனியாவில் வழங்கப்பட்ட வரவேற் பும் வழிபாடுகளும் மனத்திருப்தியை ஏற்படுத் தியுள்ளதாகவும் தமது உறவுகளின் சிறைமீட் கும் பயணத்துக்கும் நம்பிக்கை ஊட்டியுள் ளதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# துன்னாலை சதாசகாய மாதா திருவிழா நேற்றுடன் நிறைவு!

வடமராட்சி, செப். 11
துன்னாலை சதாசகாய மாதா தேவாலய வருடாந்த திருவிழா வண. பிதா ஜேம்ஸ்நாதன் அடிகள் தலைமையில் நேற்றுடன் நிறைவு பெற்றது.
கடந்த 4 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமான வரு டாந்த திருவிழாவின் இறுதி நாளான நேற்று ஞாயிற்றுக் கிழமை ஜேம்ஸ் நாதன் அடிகளா ரின் திருப்பலி ஒப்பு கொடுத்தலு டன் காலை 7:00 மணிக்கு திருச்சுரூப பவனி இடம்பெற்றது.
இந்த திருவிழாவில் அருகி லுள்ள பங்குகளின் பிதாக்கள், பங்கு மக்கள், அயல் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ -2)

# பொலிஸ் தினத்தை முன்னிட்டு மூக்குகண்ணாடிகள் வழங்கல்!

வடமராட்சி, செப். 12
பொலிஸ் திணைக்களத்தின் 156ஆவது ஆண்டை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவை சங்க கர வெட்டி கிளையுடன் இணைந்து மூக்குக்கண்ணாடி வழங்கி வைக் கப்பட்டது.
நெல்லியடி பொலிஸ் நிலை யத்தில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இந்த நிகழ்வு இடம்பெற் றது. பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மக்களுக் கான மூக்குக் கண்ணாடிகள், பயன்தரும் மரங்கள் என்பன வழங்கப்பட்டன.
இந்நிகழ்வில், காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சர் ரஞ்சித் கொட்டாச்சியும், காங்கேசன்துறை பொலிஸ் உதவி அத்தியட்சர் சுஜீவ இத்துமால் கொட மற்றும் நெல்லியடி பொலி ஸார் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 2)

# மூன்றாம் சார்லஸ்

## பிரிட்டன் அரசராகப் பிரகடனம்

லண்டனில் உள்ள புனித ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வில் மூன்றாம் சார்ல்ஸ் ஐக்கிய ராஜ்ஜியத்தின் அரசராக முறைப்படி பிரகடனம் செய்யப்பட்டார்.

சனிக்கிழமை காலை நடைபெற்ற பாரம்பரிய நிகழ்வுகளில் ராணியின் இறப்பையொட்டி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்ட கொடிகள் புதிய அரசர் பதவி ஏற்றதை கொண்டாடும் விதமாக முழுக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

வரலாற்றிலேயே முதல்முறையாக இந்த நிகழ்வுகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை பிரிட்டனின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற மேலதிக அறிவிப்புகள் வெளியாகும். அப்போது செப்டம்பர் எட்டாம் தேதி ராணி இறந்ததை ஒட்டி துக்கம் அனுசரிக்கும் விதமாக மீண்டும் அரைக் கம்பத்தில் பறக்கத் தொடங்கும்.

அக்சஷன் கவுன்சிலால் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டவர் பாரம்பரிய வழக்கங்களின்படி நடைபெற்ற நிகழ்வில் அரசராக உறுதிமொழி ஏற்றுக்கொண்டார். இத்தகைய ஒரு நிகழ்வு கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெறவில்லை.



### நிகழ்வில் என்ன நடந்தது?



#### பிரகடனம் என்பது எதைக் குறிக்கிறது?

ஆக்ட் ஆஃப் செட்டில்மென்ட் 1701 எனும் சட்டத்தின் விதிகளின்படி சார்ல்ஸ் ஏற்கனவே மன்னராகத்தான் இருக்கிறார். அவருடைய தாயின் மறைவுக்குப் பிறகு இவர் தாமாக அரசர் ஆகிவிட்டார்.

எனவே அக்சஷன் கவுன்சிலின் நோக்கம் என்பது சம்பிரதாயமாக அறிவிப்பது மட்டுமே. நாட்டின் புதிய அரசரின் பெயரை இது அலுவல்பூர்வமாக அறிவிக்கும். ராஜா அல்லது ராணியின் மரணம் நிகழ்ந்த 24 மணி நேரத்திற்குள் இந்த பிரகடனம் நிகழும்.

ஆனால் இம்முறை இரண்டாம் எலிசபெத் ராணி மரணத்துக்கும் பக்கிங்காம் மாளிகைக்கு அருகிலேயே மத்திய லண்டனில் இருக்கும் புனித ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற இந்த பிரகடன நிகழ்வுக்கும் இடையே சற்று நேரம் அதிகமாகிவிட்டது.

பாரம்பரிய வழக்கங்களுக்கும் மாறாக இம்முறை அக்சஷன் கவுன்சிலின் அறி விப்பை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப அரசர் மூன்றாம் சார்ல்ஸ் முடிவு செய்தார்.

#### யாரெல்லாம் கலந்து கொண்டார்கள்?

ப்ரைவி கவுன்சிலை சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் புனித ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். ப்ரைவி கவுன்சில் என்பது இந்நாள் மற்றும் முன்னாள் அரசியல்வாதிகளை உள்ளடக்கிய அரசருக்கு முறைப்படி ஆலோசனை வழங்கும் குழு ஆகும். நோர்மேன் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்து இது இயங்குகிறது.

இதில் சுமார் 700 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால் இந்த நிகழ்விற்கு 200 பேர் மட்டுமே அழைக்கப்பட்டு இருந்தனர். தற்போது அரச துணைவியார் பட்டத்தைப் பெற்றுள்ள, சார்ல்ஸின் 17 ஆண்டு மனைவியான கமில்லா பார்க்கர் பவுல்ஸ், மன்னரின் மகனும் புதிய வேல்ஸ் இளவரசருமான வில்லியம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

#### முதல் பாகம் - அரசரின் பெயர் அறிவிக்கப்பட்டது

அக்சஷன் கவுன்சில் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டது. அதில் இரண்டாவது நிகழ்வில் மட்டுமே சார்ல்ஸ் கலந்து கொண்டார்.

முதல் தருணத்தில் லார்ட் பிரசிடெண்ட் என்று அழைக்கப்படும் கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் ராணி இறந்ததை அறிவித்தார். இவர் செப்டம்பர் 6ஆம் திகதி பிரதமர் லிஸ் டிரசால் இந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார்.



இவர் இந்த கவுன்சிலின் எழுத்தரை மூன்றாம் சார்லஸ் அரசராக தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிவிக்கும் பிரகடனத்தை வாசிக்கச் சொன்னார்.

இந்தக் கூட்டத்தில் கூடியிருந்த சுமார் 200 உறுப்பினர்கள் ஆவணங்களில் கையெழுத்திடும் முன்பு “காட் சேவ் தி கிங்”(God Save the King) என்று கூறினர்.

இளவரசர் வில்லியம், பிரதமர் லிஸ் டிரஸ், ஆர்ச்பிஷப் ஜஸ்டின் வில்பை ஆகியோர் இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதன் பின்பு இந்த பிரகடனம் அரச குடும்ப உறுப்பினர்கள், பிரதமர், கேன்டர்பரி ஆர்ச்பிஷப், லார்ட்சான் சிலர், அரசு நிகழ்வுகளை அமைப்பதற்கு பொறுப்பான நோட் பால் கோமகன் இயர்ல் மார்ஷல் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர்.

அனைவரும் கையெழுத்திட்ட பின்பு மீதமுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிவிக்கும் பொருட்டு அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்று பென்னி மோர்டான்ட் கேட்டுக் கொண்டார். அதில் மத்திய லண்டனில் உள்ள ஹைடு பூங்கா மற்றும் லண்டன் டவரில் துப்பாக்கிகள் முழங்குவதற்கான ஆணையும் அடங்கியிருந்தது.

இந்தப் பிரகடனம் பெல்ஃ பாஸ்ட், கார்டிஃப், எடின்பரோ மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும் வாசிக்கப்பட்டது.

#### பாகம் இரண்டு - மன்னரின் உரை

அக்சஷன் கவுன்சிலின் நடவடிக்கை யின் இரண்டாம் பாகமாக புனித ஜேம்ஸ் மாளிகையில் உள்ள அரியணை அறையில் ப்ரைவி கவுன்சில் உறுப்பினர்கள் புதிய மன்னரை வாழ்த்தினர். புதிய மன்னரால் ப்ரைவி கவுன்சிலில் உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்பட்ட முதல் கூட்டம் இது.

கவுன்சிலின் உறுப்பினர்கள் புதிய அரசரை வரவேற்றதுடன் பாரம்பரியத்தை பின்பற்றும் வகையில் அமராமல் நின்று கொண்டிருந்தனர்.

தமது உணர்ச்சிமிக்க முதல் உரையில் புதிய அரசர் தமது அன்புக்குரிய தாயின் சேவை மிகுந்த வாழ்க்கையை பற்றி குறிப்பிட்டதுடன், அவரது காலடித்தடத்தை பின்பற்றுவதற்கும் உறுதிமொழி அளித்தார்.

“நம் அனைவருக்கும் ஏற்பட் டுள்ள சரி செய்ய முடியாத இந்த இழப்பைக் குறித்து ஒட்டு மொத்த உலகமும் என் மீது அனுதாபம் கொள்கிறது. காலம், அர்ப்பணிப்பு மற்றும் பக்தியில் என்னுடைய தாயின் ஆட்சிக் காலம் வேறு எதற்கும் நிகர் இல்லாதது.”

“துயருற்றிற்கும் இந்த நேரத்திலும் அப்படிப்பட்ட நம்பிக்கை அளிக்கும் வாழ்க்கைக்கு நாம் நன்றி கூறுகிறோம்,” என்று அவர் உரையில் குறிப்பிட்டார். தமது உரையில் புதிய பொறுப்புகள் குறித்தும் அரசர் பேசினார்.

“என்னுடைய ஆழமான மரபு மற்றும் எனக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் மிகுந்த கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து நான் மிகவும் விழிப்புணர்வுடன் இருக் கிறேன்,” என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

என் அன்புக்குரிய மனைவியின் தொடர்ச்சியான ஆதரவு எனக்கு மிகுந்த ஊக்கமளிக்கிறது என்று அரச துணைவி கமில்லாவை அவர் பாராட்டினார்.

#### மன்னர் சார்ல்ஸ் என்ன உறுதிமொழி ஏற்றார்?

ஆக்ட் ஆப் யூனியனின் சரத்துகளின் படி ஸ்காட்லாந்து தேவாலயத்தை பாதுகாக்கவும் பராமரிக்கவும் புதிய அரசர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் ஸ்காட்லாந்தில் தேவாலயம் மற்றும் அரசுக்கு இடையே அதிகாரப் பகிர்வு உள்ளது.

இந்த உறுதிமொழியின் இரண்டு பிரதிகளை ப்ரைவி கவுன்சில் முன்பு சார்ல்ஸ் கையெழுத்திட்டார்.

அதில் வேல்ஸ்-இன் புதிய இளவரசர் வில்லியம், அதன் பின்பு அரச துணைவியார் கமில்லா ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்திட்டனர்.



(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பாரதி மறைந்து நேற்று 101 வருடங்கள் -

# முருகபூபதியின் "இலங்கையில் பாரதி" -மதிப்பீடு-

**நடேசன்**

எமது அண்டை நாடான பாரத தேசத்தில் பிறந்த மூவர் நமது இலங்கையில் தங்களது சிந்தனைகள், செயல்களால் செல்வாக்கு செலுத்தினார்கள். அவர்களில் கௌதம புத்தர் முதன்மையானவர். அவர் இலங்கைக்கு வந்தாரோ, இல்லையோ, அவரது உபதேசங்கள் இலங்கையில் தேர வாத பௌத்த சமயமாக இரண்டாயிரம் வருடங்கள் முன்னதாக ஆழமாக வேரூன்றியது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் மோகனதாஸ் கரம் காந்தி இலங்கைக்கு வந்ததுடன், அவரது அரசியல் கருத்து போராட்ட வழி முறைகள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தியது.

உண்ணாவிரதம், அகிம்சை வழி, கடையடைப்பு என இங்கும் தமிழர், சிங்களவர் என இரு இனத்தவரும் அத்தகைய போராட்ட வடிவங்களை முன்னெடுத்தார்கள்.

ஆனால், இலங்கைக்கு வராதபோதிலும் பட்டி தொட்டி எங்கும் தமிழ் பேசும் மக்களால் கொண்டாடப்படுபவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

மற்றைய இருவரிலும் பார்க்க, இவர் ஒரு விடயத்தால் முக்கியத்துவமாகிறார்.

கௌதம புத்தரை இலங்கை, கடந்த 75 வருடங்களாகத் தேர்தல் அரசியல் சரக்காக மாற்றியதுடன், இனக்கலவரம், போர் என மூலப்பொருளாகப் பாவித்து பெரும்பான்மையான சிங்கள அரசியல்வாதிகள், அவரது கீர்த்தியை அபகீர்த்தியுடைய வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

அதேபோன்று தமிழ் அரசியல்வாதிகள் காந்தியின் கொள்கைகளை தங்களது சுயநலவாத அரசியலுக்குப் பாவித்தார்கள். போதாக்குறைக்கு ஆயுதத்தில் நம்பிக்கை வைத்திருந்த விடுதலைப்புலிகளின் தலைவர் சென்னையில் உண்ணாவிரதமுமிருந்தார். அவரது தளபதியான திலீபன் இந்திய அமைதிப்படைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். இவற்றை மன்னிக்க முடியும். ஆனால், வன்னியில் அவர்களின் சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவருக்கு காந்தி என்ற பெயரை வைத்திருந்தார்கள்.

இப்படியான எந்த அலங்கோலப் படுத்தலுக்கும் உட்படாது இன்னமும் இலங்கையில் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கம்பீரமாக பாரதி விழா, பாரதி பாடசாலை எனப் பல வழிகளில் கொண்டாடப்படுவது, எட்டயபுரத்தில் பிறந்த சுப்பிரமணிய பாரதி என்ற கவிஞன் மட்டுமே. அதுவே இங்கு முக்கியமானது.

பாரதிக்கு பல முகங்கள். ஒவ்வொரு முகங்களைப் பிடித்தவர்கள் கொண்டாடுவார்கள். தேச விடுதலைக்கான மகா கவியாக இந்தியர்கள் கொண்டாடும் போது, இந்தியரல்லாத தமிழர்கள் பாரதியின் இலக்கியப் படைப்புகளைக் கொண்டாடுகிறார்கள்.

போர் வீரன் தூரத்தில் எதிரியைக் கண்டால் அம்பையும், ஓரளவு சமீபத்தில் கண்டால் ஈட்டியையும், அருகில் வந்தால் வாளையும் எடுப்பான் . எதிரியோடு உடல் பிணைந்து பொருதும்போது குத்துவாளை உருவுவான். இவைகள் எல்லாவற்றிலும் திறமை கொண்டவனே சிறந்த வீரனாக முடியும். அதேபோல் எனது கணிப்பின்படி தமிழில், கவிதை, தாலாட்டு, சிந்து, குழந்தைப் பாட்டு, காவியம் என எல்லாவகையான சந்தங்கள் கொண்ட இலக்கிய நடையை எழுதியதுடன் உரை நடையில் சிறுகதை , கட்டுரை என்பன எழுதியதால் நவீனத் தமிழின் உரை நடையையும் உருவாக்கியவர் பாரதியே என்பார்கள்.

இவற்றிற்கு அப்பால் பாரதியை எனக்குப் பிடித்த காரணம் வேறு!

இக்காலத்தில் ஆங்கிலத்தில் பாவிக்கும் ஆயிரக்கணக்கான சொல்லடைகளை உருவாக்கியவர் வில்லியம் சேக்ஸ்பியர். (உதாரணமாக நான் நாய் பூனைகளை கருணைக் கொலை செய்யும்போது, அடிக்கடி வெட்கமற்று பாவிக்கும் வசனம் - we have to be Cruel to be kind) அதேபோன்று தமிழில் பல சொல்லடைகளை உருவாக்கியவர் பாரதியாரே.


அவற்றில் உதாரணத்திற்கு சில:

தீக்குள் விரலை வைத்தால் - அக்கினிக்குஞ்சு - உனையே மயல் கொண்டு - சுட்டும் விழிச் சுடர் இதைப்போன்று பல சொல்லடைகளை உருவாக்கியவர் பாரதியார்.

தமிழ் மொழியின் உற்பத்தியாளராக இருந்த அவரது சொல்லடைகளை வைத்து இன்றைய எழுத்தாளர்களும் கவிஞர்களும் தங்கள் பொருளாக அவற்றை சில்லறை விற்பனை செய்கிறார்கள். ஒரு விதத்தில் எல்லா நவீன தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பாரதிக்குத் தீர்க்க முடியாத நன்றிக் கடமைப்பட்டவர்கள்.

எத்தனை பேர் பாரதியின் பாடல்களையும் சொற்களையும் திரைத்துறையில், பத்திரிகைத்துறையில் எழுதி பணம் சம்பாதித்தார்கள்?

அந்த விதத்தில் எழுத்தாளர் முருகபூபதி மிகவும் விரிவாக இலங்கையில் பாரதி என்ற 283 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை பதிப்பித்துள்ளார். பாரதியாருக்கு இலங்கை எழுத்தாளர்களின் சார்பாக நன்றிக்கடனை அவர் தீர்த்துள்ளார். நன்றி மறந்த இந்த உலகத்தில் நன்றிக்கடன் தீர்ப்பது என்பது முக்கியமானது மட்டுமல்ல கொண்டாடப்பட வேண்டியதுமாகும்.




இலங்கையில் பாரதி புத்தகத்தில் உள்ளதை இங்கு சொல்ல நான் வரவில்லை. உள்ளே இருப்பதைக் கண்ணாடி அலுமாரி காட்டுவதுபோல் சிலவற்றையே இங்கு காட்ட விரும்புகிறேன்.

பாரதி உயிருடன் 1908 இலே அதாவது பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே பாரதியின் பெயரில் பாரதி பாஷா வித்தியாசாலை சின்னத்தம்பி செட்டியாரால் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் அந்தப் பாடசாலை அரசுடைமையாக்கப்பட்டது என்கிறார். இதேபோல் 1930 மலையகத்தில் தலவாக்கொல்லையில் பாரதி பாடசாலை உருவாகியது. அது இன்னமும் இயங்குகிறது என்கிறார்.

பாரதியை இலங்கையிலும் அண்ணாமலை பல்கலைக்கழத்திலும் பெருமைப் படுத்தியதுடன், அவரது கவிதைகளை இலங்கைத் தமிழ்க் கல்விப் பாடத்திட்டத்தில் 1932 இலேயே சேர்க்கப்பட்டதற்குச் சுவாமி விபுலானந்தரே காரணமாக இருந்தார். என் போன்றவர்கள் சிறு வயதிலே பாரதியின் பாடல்களை படிப்பதற்குச் சுவாமி விபுலானந்தர் காரணமானவர் என்பதை நன்றியுடன் நினைவு கூருகிறேன் .

பாரதியை இலங்கையில் தொடர்சியாக முன்னெடுத்தவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களும் கம்யூனிஸ்ட்டுகளுமே.

நான் 12 ஆம் தரத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படிக்கும்போது, நல்லூர் அரசடி வீதியிலுள்ள ஜனசக்தி சனசமூக நிலையத்தில் தொடர்ச்சியாக மல்லிகை இதழை வாசிப்பவன். அப்போது மல்லிகையின் ஒவ்வொரு இதழிலும் "ஆடுதல், பாடுதல், சித்திரம் - கவியாதியினைய கலைகளில் - உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்ஈன நிலை கண்டு துள்ளுவார்" என்ற வரிகள் அச்சிடப்பட்டிருக்கும். இந்த வார்த்தைகள் ஆரம்பத்தில் எனக்குப் புரியவில்லை. "துள்ளுவார்" என்ற வார்த்தை எனக்குச் சிரிப்பை வரவழைக்கும்.

மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமானது. பாரதியின் பிறந்த நூற்றாண்டு 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமானது.

அவ்வேளையில் இலங்கையில் பாரதி நூற்றாண்டு நாடாளவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இந்த பிறந்த நாள் நூற்றாண்டை முன்னெடுத்த போது அதன் குழுவில் இணைந்திருந்தவர்தான் எழுத்தாளர் முருகபூபதி.

அந்த அனுபவங்களையும் உள்ளடக்கி முருகபூபதி எழுதிய இலங்கையில் பாரதி கடந்த 2019 ஆம் ஆண்டு வெளியானது.

தற்போது, பாரதி நினைவு நூற்றாண்டு காலத்திலும் முருகபூபதி, பாரதி தரிசனம் என்ற நூலை வெளியிடுகிறார். இந்த தொடர்பொற்றுமையின் பின்னணியில் இலங்கையில் பாரதி நூல் பற்றிய எனது அவதான மதிப்பீட்டு குறிப்புகளை எழுதுகின்றேன்.

கொள்ளைக்காரன் ஒரு வங்கியின் இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தால், அவனது மனதில் ஏற்படும் நினைவுகளுக்கு குறைவிருக்காது. அதுபோன்றதுதான் முருகபூபதி எழுதியிருக்கும் இலங்கையில் பாரதி புத்தகத்திலுள்ள தகவல்கள். ஒரு விதத்தில் பல்கலைக் கழக டாக்டர் பட்டத்துக்கான ஆய்வு போன்றது. நிச்சயமாக இந்தப் புத்தகத்தை ஆய்வுக்கு எடுத்து பல்கலைக்கழகத்தில் பட்டம் வாங்கமுடியும். ஆனால் என்ன, நமது இலங்கைப் பல்கலைக்கழகங்கள் இவற்றைக் கண்டு கொள்ளாது.

இந்தப்புத்தகம் ஆய்வாளரது மொழியில் எழுதப்படாது செய்தியாளரது மொழியில் எழுதப்பட்டதால் வாசிக்க இலகுவாக இருக்கிறது. ஆனால், முக்கியமான தகவல்களை உள்ளே வைத்து, அக்காலத்தில் நடமாடும் புடவை வியாபாரிகளது மூட்டைபோல் இறுக்கமாக உள்ளது. அவிழ்த்தெடுத்தால் காஞ்சிபுரம், பெனாரிஸ், மணிப்புரியனெ வகை வகையாக வெளிவரும்.

இந்தப் புத்தகம் பாரதியை இலங்கைத் தமிழர் எப்படி ஆராதிக்கிறார்கள் என்பதைத் தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு புரிய வைக்கும். என் போன்றவர்களுக்குப் பல விடயங்களைப் புரிய வைத்த நண்பர் முருகபூபதிக்கு வாழ்த்துக்கள்.

# மூன்றாம் சார்ல்ஸ் பிரிட்டன் ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடைசி சாட்சிகள் இதில் கையெழுத்திடும்போது பேண்ட் வாத்தியங்கள் இசைக்க தொடங்கின.

அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்ட உறுதிமொழிகளை ஏற்க அரசர் சால்ஸ் மறுத்திருக்கலாம். கடைசியாக 1910ஆம் ஆண்டு கத்தோலிக்க மதத் துக்கு எதிரான சொற்கள் இருப்பதாக உறுதி மொழி ஏற்க அரசர் ஐந்தாம் சார்ஜ் மறுத்தார்.

**பால்கனியில் என்ன நடந்தது?**

இதன் பின்பு நிகழ்வுகள் மாளிகைக்கு வெளியே நடந்தன. ஃப்ரையரி கோர்ட்டில் இருந்து தி மாலுக்குள் மன்னர் பிரகடனம் செய்வதை பார்க்க பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

"தங்கள் செல்லப் பிராணிகளை தூக்கிக் கொண்டும், மலர்களை ஏந்திக் கொண்டும், ஸ்பைடர் மேன் பைஜாமா அணிந்த ஒரு சிறுவனை அழைத்துக் கொண்டும் அவர்கள் வந்தனர் சூட்டு அணிந்தவர்கள் முதல் சைக்கிளிங் கியரில் இருந்தவர்கள் வரை அங்கு இருந்தனர்", என பிபிசி செய்தியாளர் ஜேம்ஸ் பிரையண்ட் அங்கிருந்து தெரிவிக்கிறார்.

ஃப்ரையரி கோர்ட்டுக்கு மேலே உள்ள பால்கனியில் கார்ட்டர் கிங் ஆப் ஆம்ஸ் சென்று பிரகடனத்தை வாசித்தார்.

பின்னர் ஸ்டேட் ட்ரம்பேட்டர்ஸ் என்று அழைக்கப்படும் இசைக்கலைஞர்கள் ராயல் சல்யூட் இசைத்தனர். சுமார் 70 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக "காட் சேவ் தி கிங்" என்ற சொற்களுடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

**அடுத்து என்ன நடக்கும்?**

"காட் சேவ் தி கிங்" என்று ப்ரைவி கவுன்சிலின் எழுத்தர் அறிவிக்கும் முன்பு, "அரசர், காமன்வெல்த்தின் தலைவர், நம்பிக்கைகளை பாதுகாப்பவர்" என்று பிரகடனம் செய்தார். இத்துடன் இந்த நிகழ்வு முடிவுக்கு வந்தது.


அதன் பின்பு பென்னி மோர்டான்ட் பிரகடனத்தின் பிரதிகளை வாசித்தார். அவற்றுக்கு மன்னர் மூன்றாம் சார்லஸ் ஒன்றன்பின் ஒன்றாக ஒப்புதல் அளித்தார்.


ராணியின் இறுதிச் சடங்கு நடக்கும் நாளை பொது விடுமுறையாக அறிவித்ததும் அவற்றில் ஒரு பிரகடனமாகும். அரசர் சார்ல்ஸின் முடிசூட்டல் நடக்க இன்னும் சில காலம் ஆகலாம். இரண்டாம் எலிசபெத்தின் தந்தை அரசர் ஆறாம் ஜார்ஜ் உயிரிழந்த பிப்ரவரி 1952க்கும் அவரது முடிசூட்டில் நடந்த ஜூன் 1953க்கும் இடையே 16 மாதங்கள் இருந்தன.


(பிபிசி)


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?




38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39.  3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**12.09.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**12.09.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சட்டவிரோதமாக வெளிநாடு பயணம் 85 பேர் திருமலை கடலில் கைதாகினர்!

**திருகோணமலை, செப். 12**

**சட்டவிரோதமாக கடல் வழியாக வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இவர்கள் பலநாள் மீன்பிடி படகுகளின் உதவியுடன் இவ்வாறு செல்ல முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் 18 வயதுக்கு மேற்பட்ட 60 ஆண்கள், 14 பெண்கள் மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பதினொரு சிறுவர்கள் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீன்பிடி படகுடன் திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)



# கிரானில் அரச காணிகள் அபகரிப்பு; கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை!

மட்டக்களப்பு, செப். 12

கிரான் பிரதேச செயலாளர் பிவிலுள்ள புணானை, ஜெயந்தியாய மற்றும் நிதிதென்ன ஆகிய பிரதேசங்களில் ரயில் பாதையை ஊடறுத்து செல்லும் அரச காணிகளை அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் சட்டவிரோதமான முறையில் அபகரித்து வருகின்றனர் என்று கிராம மக்கள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பிரதேசங்களுக்கு திம்புலாகல ராகுலாங்கார நாகினி தேரர் சென்று பார்வையிட்டார்.

புணானை பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் சிலருடன் தேரர் குறித்த இடங்களுக்கு சென்று, காணிகளில் கட்டடம் கட்டுவோர் மற்றும் சுற்று வேலி இடுவோரிடம் விடயம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கவனத்தில் கொண்டு, சிறு தானியப் பயிர் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சின் கீழ், ரயில் பாதையை அண்மித்த நிலங்களை விவசாயத்தில் ஈடுபடச் செய்யும் முகமாக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

"இவ்விடயம் தொடர்பாக அறிந்த மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்தோர் சிலர் காணிகளை பிடித்து, தென்னை மரங்களை நாட்டியும்,கற்களைக் கொண்டு கட்டடங்களை அமைத்து அரச கொள்கைக்கு எதிராக செயல்படுகின்றனர்.

"அத்துடன், இந்தப் பிரதேசங்களின் ஊடாகவே யானைகளின் நடமாட்டங்கள் உள்ளன. இவர்களின் இவ்வாறான செயற்பாட்டால் யானைகளின் வாழ்வியல் செயல்பாட்டிலும் பாதிப்பு ஏற்படும். எனவே, ரயில் திணைக்களத்துக்குரிய காணிகளை சட்டவிரோதமாக அபகரிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும்" என்றார்.

மேலும், இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தேரர் இதன்போது தெரிவித்தார்.

# ஒரு இலட்சம் பனை மர நடுகை ஆரம்பித்து வைப்பு

வாகரை, செப். 12

சமூக மட்ட பிரதேச மக்களின் முழுமையான பங்கேற்புடன் காட்டு யானைகளின் ஊடுருவலையும் மண்ணரிப்பையும் தடுக்க ஒரு இலட்சம் பனை மரங்களை வளர்க்கும் செயல் திட்டம் வாகரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

"நிலைபேறான சமூக அபிவிருத்திக்கு சூழலைப் பொருளாதார மூலதனமாக்குவோம் அதற்காக பாடுபடுவோம்" எனும் தொனிப் பொருளின் கீழ் பனை விதை நடுகை விசேட செயல்திட்ட வாரம் வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பால்சேனை அம்மன் குளத்தை அண்டிய நிலப் பரப்பில் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு இலட்சம் பனம் விதைகளை நடும் இந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொருளாதார வளர்ச்சி வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு ரூபாய்க்கு ஒரு பனம் விதை என்ற அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு நாட்டப்படுவதாக நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உதயபுரி ஆதிபராசக்தி அறப்பணி மையத்துக்கு நிர்வாக குழு தெரிவு!

திருகோணமலை, செப். 12

சுவிற்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்டத்தின் உப கிளைகளுள் ஒன்றான உதயபுரி அறப்பணி மையத்தின் பொதுக்குழுக்கூட்டமும், நிர்வாகத்தெரிவும் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உதயபுரி அறப்பணி மையத்தின் தலைவராக ச.விஜயப்பிரியா, உப தலைவராக நந்தினி, செயலாளராக நிலுக்சா உட்பட நிர்வாகக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)



# "அரச நடமாடும் சேவைகளை மக்கள் பயன்படுத்த வேண்டும்!"

நிந்தவூர், செப். 12

"அரச திணைக்களங்களின் சேவைகளை பொது மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே நடமாடும் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே இத்தகைய சேவைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லதீப் கூறினார்.

அட்டைப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற பொலிஸ் நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் சேவையின் 156 ஆவது வருட நிறைவையொட்டிய பொலிஸ் வார நிகழ்வுகளின் இறுதி நிகழ்வாக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தினால், இந்த பொலிஸ் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. நிந்தவூர் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஐ.எல். ஐயூப்கான் தலைமையில் நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எம்.அஷ்ரப், பொலிஸ் ஆலோசனைக் குழுத்தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான எம்.ஏ.எம்.றசீன், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் சரீன், அட்டப்பள்ளம் சிறீ சித்திவிநாயகர் ஆலய பிரதம தர்மகர்த்தா எம்.கோபாலன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீப் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

"கடந்த 156 வருடகாலமாக நாட்டுக்கும், இலங்கை வாழ் மக்களுக்கும் பொலிஸார் ஆற்றிவரும் சேவைகள் பெரிதும் பாராட்டத்தக்கவையாகும்.

அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் நாட்டுக்கும், மக்களுக்கும் பாதுகாப்பை வழங்கும் முதன்மை இலக்கையும் அமைதி, சமாதான நோக்கையும் கொண்டதாகும்.

இதேவேளை முப்பது வருடகால யுத்தம் மற்றும் அனர்த்த நிலமைகளால் அல்லலுற்ற மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஆவணக்குறைபாடுகளை நிவர்த்திக்கவும், தீர்வுகளைக்காணவும் பொலிஸ் நடமாடும் சேவைகள் பெரும் பயனளிக்கின்றன.

குறிப்பாக, மக்களின் காலடிக்கு அரச சேவைகளை கொண்டு செல்லும் நோக்குடன் நடமாடும் சேவைகள் இடம்பெற்றுவருகின்றன - என்றார். (ஐ- 6)



# ஹெரோயின் போதைப் பொருளுடன் கல்முனையில் இருவர் கைதாகினர்!

கல்முனை, செப். 12

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த 2 சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சனிக்கிழமை சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடி வீதியில் வைத்து சந்தேக நபர்கள் இருவரும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதாகினர்.

இவ்வாறு கைதான நபர்கள் சாய்ந்தமருது கல்முனையை சேர்ந்த 19 மற்றும் 56 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன், சந்தேக நபர்கள் வசம் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் 9.5 கிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் சாய்ந்தமருது பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தினர். (ஐ-1)

# இரட்டை குழந்தைகளுக்கு வெவ்வேறு தந்தையர்கள்!

லிஸ்பன், செப். 12

போர்த்துக்கல்லில் ஓர் இளம் பெண்ணுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு அப்பாக்கள் வெவ்வேறு நபர்கள் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

போர்த்துக்கல்லில் உள்ள மினரோஸ் நகரில் மிகவும் அரிதான இந்த சம்பவம் நடந்துள்ளதாக அந்த நாட்டின் ஜி1 குளோபோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

19 வயதான அந்தப் பெண் ஒரே நாளில் இரண்டு ஆண்களுடன் உடல் உறவு கொண்டார். இதன்பின்னர், கருவுற்றிருந்த அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

தன்னுடைய குழந்தைகளுக்கு இவர்தான் தந்தையாக இருக்கலாம் என ஒரு நபருடன் இருந்துள்ளார். பின்னர், மரபணு பரிசோதனை செய்ய முடிவு செய்து, தன்னுடைய இரு குழந்தைகளுக்கும் மரபணு பரிசோதனை செய்தார்.

அவற்றில், ஒரு குழந்தையின் மரபணு மட்டுமே உடனிருந்தவருடன் ஒத்துப்போனது. அதன் பின்னர்தான், இன்னோர் ஆணுடனும் அதே நாளில் உடலுறவு கொண்டதை நினைவுகூர்ந்த அந்த பெண், இரண்டாம் நபரை அழைத்துள்ளார்.

அவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் மற்றொரு குழந்தை அந்த இரண்டாம் நபருக்குப் பிறந்தமை தெரிய வர அனைவரும் அதிசயப்பட்டு அதிர்ச்சியடைந்தனர்.

ஒரே வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு வேறுவேறு அப்பாக்கள் என்பது உலக அறிவியல் வரலாற்றில் அரிதான விடயமாகப் பார்க்கப்படுகிறது.

இரண்டு குழந்தைகளும் பிறந்து இப்போது சுமார் 16 மாதங்களாகும் நிலையில், "இவ்வாறு நடக்கும் என்று எனக்குத் தெரியாது, நான் எதிர்பார்க்கவில்லை" என்று அந்த பெண் கூறியுள்ளார்.

எனினும், இரு குழந்தைகளின் பிறப்பு சான்றிதழிலும் ஒருவரின் பெயரே தந்தை பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரே இரு குழந்தைகளையும் வளர்க்கப் பொறுப்பேற்றுள்ளார் என்றும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

சோதனை மேற்கொண்ட மருத்துவர் இதுகுறித்து, "இது மிகவும் அரிதானது. அறிவியலில் இதனை "ஹெட்டோரோ பேட்டர்னல் சுப்பர்ஃபெகண்டேஷன் (heteropaternal superfecundation) என்பார்கள். ஒரே மாதவிடாய் சுழற்சிக் காலத்தில் ஒரு பெண்ணின் உடலிலிருந்து இரண்டாவதாக ஒரு கருமுட்டை வெளியாகும்போது இவ்வாறு நிகழலாம். ஆனால், இதே காலகட்டத்தில் அந்தப் பெண் வேறு நபர்களுடன் உடலுறவு வைத்திருக்க வேண்டும்" என்றார்.

இதுபோல, உலகில் ஒரே பிரசவத்தில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்கு வெவ்வேறு தந்தைகள் இருப்பது இதுவே முதன்முறையல்ல, இது 20 ஆவது நிகழ்வு. பதிவு செய்யப்பட்ட மருத்துவ வரலாற்றில் ஏற்கனவே, இவ்வாறு 19 முறை நடந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பின்வாங்குகிறது ரஷ்யா; கார்கிவ் உக்ரைன் வசம்!

கீவ், செப். 12

**வடகிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்த கார்கிவ் நகரிலிருந்து படைகளை மீளப்பெறுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் முக்கிய கோட்டையாக கருதப்பட்ட கார்கிவ்வை விட்டு பின்வாங்குவது ரஷ்யாவுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியாகக் கருதப்படுகிறது.**



அமெரிக்கா மற்றும் மேற்குலகின் நவீன ஆயுதங்களை பயன்படுத்தி உக்ரைன் ஆரம்பித்துள்ள எதிர்த் தாக்குதல், ஒரு வாரத்தில் உக்ரைன் போர் களத்தில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சனிக்கிழமையன்று கார்கிவ் மாகாணத்தில் இஷ்யூம் நகரின் விரைவான வீழ்ச்சி ரஷ்யாவின் மிக மோசமான தோல்வியாகும். மார்ச் மாதம் தலைநகர் கீவில் இருந்து படைகளை திரும்பப் பெற்றமைக்குப் பின்னர் ஏற்பட்ட பெரிய தோல்வி இதுவாகும். ஆறு மாத கால யுத்தத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றம் இது. ஆயிரக்கணக்கான ரஷ்ய படையினர் வெடிமருந்து கையிருப்பு மற்றும் உபகரணங்களை அவர்கள் தப்பி ஓடும்போது கைவிட்டனர்.

ரஷ்யப் படைகள் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகியவற்றை உள்ளடக்கிய டான்பாஸ் பிராந்தியத்தின் மீது வடக்கில் இருந்து ஒரு மாத காலமாக மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கையின், முக்கிய தளபாட விநியோக தளமாக இஷ்யூமை பயன்படுத்தியது.

அரசாங்கம் நடத்தும் TASS செய்தி நிறுவனம், ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள் காட்டி, துருப்புக்களை அங்கிருந்து வெளியேறவும், அயலில் உள்ள டோனெட்ஸ்கில் வேறு இடங்களில் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் உத்தரவிட்டுள்ளதாக கூறியது.

கார்கிவில் உள்ள ரஷ்ய நிர்வாகத்தின் தலைவர் குடியிருப்பாளர்களிடம் "உயிர்களைக் காப்பாற்ற" மாகாணத்தை விட்டு வெளியேறி ரஷ்யாவுக்கு தப்பிச் செல்லுமாறு கூறினார் என்றும் TASS தெரிவித்துள்ளது. (ஐ)



தங்கள் நாட்டினதும் மகாராணி இரண்டாம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவுஸ்திரேலியாவின் புகழ்பெற்ற ஒபேரா இல்லத்தில் இருளுடன் கூடிய மகாராணியின் விம்பம் ஒளிர்கிறது...!

**குறிப்பு** - பிரித்தானியாவின் மகாராணி அல்லது அரசரின் கீழேயே அவுஸ்திரேலியா, கனடா நாடுகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுதத் தாக்குதல்!

## வடகொரியா எச்சரிக்கை

பியொங்யாங், செப். 12

"எதிரி நாடுகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுத தாக்குதல் நடத்துவோம்", என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வடகொரியா ஆகிய 9 நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்காவிடம் 5,800 அணு ஆயுதங்களும், ரஷ்யாவிடம் 6,375 அணு ஆயுதங்களும் இருப்பதாகவும் கூறப்படுகிறது. வடகொரியாவிடம் சுமார் 40 அணு ஆயுதங்கள் இருக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் வடகொரிய பாராளுமன்றத்தில் அணு ஆயுதம் தொடர்பான புதிய சட்டம் இயற்றப்பட்டது. எந்தெந்த சூழ்நிலைகளில் அணுஆயுதத்தைப் பயன்படுத்தலாம் என்று வட கொரியா ஏற்கெனவே ஒரு கொள்கை வகுத்து வைத்திருந்தது. அதில், தற்போது சில சூழ்நிலைகளை கூடுதலாக சேர்த்துள்ளது. குறிப்பாக ஆட்சியை கவிழ்க்க சதி நடந்தாலும் அணு ஆயுத தாக்குதல் நடத்த ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



இந்த சட்டத்தின்படி அணு ஆயுதங்களை பயன்படுத்த வடகொரிய ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எதிரி நாடுகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டால் தற்காப்புக்காக அணு ஆயுதங்களை பயன் படுத்துவோம் என்று புதிய சட்டத்தின் மூலம் வடகொரியா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# திமிங்கலம் மோதியதில் படகு கவிழ்ந்து ஐவர் பலி!

ஹமில்டன், செப். 12

நியூசிலாந்தில் தெற்கு தீவின் கரையோர நகரமான கைகோராவில் 11 பேரை ஏற்றிச் சென்ற படகொன்று நேற்று கவிழ்ந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

இந்தப் படகை திமிங்கலம் மோதிக் கவிழ்த்ததாக நம்புவதாக "நியூசிலாந்து வானொலி"க்கு கைகூரா நகர மேயர் கிரேக் மேக்கிள் தெரிவித்துள்ளார். எனினும், இதனை பொலிஸார் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. இது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது பல உயிர்களை பறித்த ஒரு சோகமான நிகழ்வு. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவிக்கிறேன் எனவும் கைகூரா நகர மேயர் கிரேக் மேக்கிள் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களை முறையாக அடையாளம் காணும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் பெயர்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. உயிர் பிழைத்த ஆறு பேர் கைகோரா சுகாதார மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒருவர் முன்னெச்சரிக்கையாக கிறிஸ்ட்சர்ச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வேல்ஸ் இளவரசராக வில்லியம் அறிவிப்பு

லண்டன், செப். 12

பிரிட்டனின் அங்கமான வேல்ஸின் இளவரசராக சார்ள்ஸ் இருந்து வந்தார்.

மகாராணி இரண் டாம் எலிசபெத்தின் மரணத்தைத் தொடர்ந்து மூன்றாம் சார்ள்ஸ் என்ற பெயருடன் மன்னராக முடி சூடிக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், "எனது மகன் வில்லியம், நான்50 ஆண்டு காலமாக வைத்திருந்த ஸகொட்லாந்து பட்டங்களை பெறுகிறார். அவர் இனி கான்வால் கோமகனாக தனது கடமைகளை செய்வார். வில் லியமை வேல்ஸ் இளவரசராக நியமிப்பதிலும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

வேல்ஸ் இளவரசியாக வில்லியமின் மனைவி கேத்தரீன் இருப்பார். எனது இளைய மகன் ஹாரி மற்றும் மருமகள் மேகனுக்கு எனது அன்பை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தொடர்ந்து வெளிநாட்டில் வசிப்பர்" -என்றார். (ஐ)



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் இகா ஸ்வியாரெக் சம்பியன்!



நியூயோர்க், செப். 12

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த இறுதிப்போட்டியில் ஒன்ஸ் ஜபேரை 6-2, 7-6 என்ற நேர் செற் கணக்கில் ஸ்வியாரெக் வீழத்தினார்.

பிரெஞ்சு ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற ஸ்வியாரெக் அமெரிக்க ஓப்பன் தொடரிலும் பட்டம் வென்றுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இகா ஸ்வியாரெக் வென்றுள்ள 3ஆவது பட்டம் இதுவாகும் என்பதுடன், இந்த ஆண்டில் இரு பட்டங்களை வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




# ஆசியக் கிண்ண வலைபந்தாட்டம் 6ஆவது தடவை இலங்கை சம்பியன்!

சிங்கப்பூர், செப். 12

ஆசியக் கிண்ண வலைபந்தாட்டப் போட்டியின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது இலங்கை அணி. ஆறாவது தடவையாக இலங்கை அணி இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

சிங்கப்பூரில் நேற்று நடந்த இறுதிப் போட்டியில் இலங்கை அணி சிங்கப்பூரை எதிர்த்தாடியது. இதில், இலங்கை அணி 63 - 53 புள்ளிகள் அடிப்படையில் சிங்கப்பூரை தோற்கடித்து சம்பியனாகியது.

முன்னதாக, இந்த சுற்றுப் போட்டியில் இலங்கை அணி, 102 - 14 புள்ளகள் என்ற அடிப்படையில் இந்தியாவையும் 99 -37 என்ற கணக்கில் பிலிப்பைன்ஸையும், 55 - 53 புள்ளி கணக்கில் மலேசியாவையும், அரையிறுதியில் 67 - 43 என்ற புள்ளிகள் கணக்கில் ஹொங்கொங்கையும் வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பாகிஸ்தான் அணியின் ஆலோசகரானார் ஹைடன்!

கராச்சி, செப். 12

உலகக் கிண்ணத்தில் விளையாடும் பாகிஸ்தான் அணிக்கு மத்தியூ ஹைடன் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஒக்ரோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியின் ஆலோசகராக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடனை நியமித்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்ற இருபது -20 உலகக் கிண்ணத்திலும் ஹைடன், பாகிஸ்தான் அணியின் ஆலோசகராக செயல்பட்டிருந்தார். அந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி அரை இறுதி வரை முன்னேற்றம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்

# அல்கராஸ் - காஸ்பர் இறுதியில் மோதல்!

நியூயோர்க், செப். 12

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்வதற்கான இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், நோர்வேயின் காஸ்பர் ரூட் மோதுகின்றனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் ஆடவர் ஒற்றையர் அரையிறுதி சுற்றில் 3ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், 22ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் பிரான்சிஸ் தியாபோவை எதிர்த்து விளையாடினார்.

4 மணி நேரம் 19 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் 19 வயதான கார்லோஸ் அல்கராஸ் 6-7 (6-8), 6-3, 6-1, 6-7 (5-7), 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் ரபேல் நடாலுக்கு பிறகு இளம் வயதில் கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் கார்லோஸ் அல்கராஸ்.





கடந்த 2005ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் இறுதி சுற்றில் ரபேல் நடால் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதி சுற்றில் கார்லோஸ் அல்கராஸ், 5ஆம் நிலை வீரரான நோர்வேயின் காஸ்பர் ரூட்டை எதிர்கொள்கிறார். காஸ்பர் ரூட் அரையிறுதியில் 27ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் கரேன் கச்சனோவை 7-6 (7-5), 6-2, 5-7, 6-2 என்ற செற் கணக்கில் தோற்கடித்தார்.

இன்று திங்கட்கிழமை நடக்கும் இறுதிப் போட்டியில் பட்டம் வெல்பவர்கள் சம்பியன் கோப்பையுடன் உலக ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் முதலிடத்தையும் கைப்பற்றுவார்கள். (ஐ)

# அரோன் பின்ஞ் ஓய்வு!

கெய்ர்ன்ஸ், செப். 12

நியூசிலாந்து அணிக்கு எதிராக கெய்ர்ன்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியுடன் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் அரோன் பின்ஞ் அறிவித்தார்.

எனினும், இருபது - 20 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்காக தொடர்ந்தும் விளையாடுவார் என்று தெரிவித்தார்.

35 வயதான ஆரோன் பின்ஞ் 145 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி 17 சதங்களுடன் 5,401 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். 54 போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளார்.




2015ஆம் ஆண்டு 50 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணியில் அரோன் பின்ச் இடம் பெற்றிருந்தார்.

2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் ஆஸி அணியை அரையிறுதிவரை அழைத்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச கூட்டுத்தாபனங்களால் ரூ. ஒரு இலட்சம் கோடி நட்டம்!

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கொழும்பு, செப். 12

**அரச கூட்டுத்தாபனங்களால் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ள தாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.**

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் செயலமர்வில் இதனை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்து சபை போன்ற நிறுவனங்கள் நட்டத்தை சந்திக்கும் பொது நிறுவனங்களில் முன்னிலையில் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன், அந்த நிறுவனங்களால் ஏற்படும் பெரும் நட்டத்தை அரசாங்கத்தால் இனியும் தாங்க முடியாது எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சந்தேகநபர்களை கைது செய்ய சென்ற பொலிஸார்மீது தாக்குதல்!

புத்தளம், செப். 12

புத்தளம் - ஆனமடுவ-கொட்டுகச்சி பிரதேசத்தில் கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புத்தளம் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் மூன்று பொலிஸார் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு சந்தேக நபர்களை கைது செய்து விட்டு பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கொட்டுக்கச்சி- பூரணாகம பகுதியில் வீதியை மறித்த இனந்தெரியாதோர் இரும்பு கம்பி மற்றும் பொல்லுகளால் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், தாக்குதலில் ஈடுபட்ட 6 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனம், இ. மி. ச. மறுசீரமைப்பு தொடர்பில் பேசப்பட்டது

கொழும்பு, செப். 12

மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளைப் பெறுவது தொடர்பில் உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்கள் மற்றும் எரிசக்தி துறையின் தேவைகள் குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மின்சக்தி அமைச்சில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் இலங்கையின் முகாமையாளர் உட்பட உலக வங்கியின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# வன விலங்கு பூங்காவை பார்வையிடும் கட்டணங்கள் இரு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, செப். 12

வனவிலங்கு திணைக்களம் தேசிய வனவிலங்கு பூங்காக்களுக்கான நுழைவு கட்டணத்தை கிட்டத்தட்ட இரு மடங்காக உயர்த்தியுள்ளது. முன்னறிவிப்பின்றி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் விளைவாக சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நபருக்கு முன்பு இருந்த ரூ. 9,688 கட்டணம் தற்போது ரூ.14,920 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 649.2 வீத அதிகரிப்பை இலங்கை பெற்றது. கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 37,760 பேர் வருகை தந்துள்ளனர். ஒகஸ்ட் இறுதி வரை, 496,430 பேர் வந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் மற்றும் உணவுப் பற்றாக்குறை போன்ற ஏனைய பிரச்னைகள் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை இவ்வருடம் குறைந்துள்ளது. தற்போது இந்தப் பிரச்னைகள் தணிந்து, இலங்கைக்கு எதிரான பயண ஆலோசனைகள் நீக்கப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் தொடங்கும் என சுற்றுலாத்துறை நம்புகிறது. (ஐ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
02 - 02 - 1932

மறைவு
06 - 09 - 2022

## திருமதி நல்லம்மா சபாரட்ணம்

யாழ். நல்லூர் வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், இந்தியா திருச்சி, கொழும்பு ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நல்லம்மா சபாரட்ணம் அவர்கள் 06-09-2022 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா கண்ணம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாரட்ணம்(சசிபாரதி- முன்னாள் ஈழநாடு ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஜயபாரதி மற்றும் மாலதி, காலஞ்சென்ற கோமதி, யோகபாரதி, நவபாரதி, ஷாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், வாஹினி, ரவிக்குமார், சுதாகர்(பிரான்ஸ்), நிர்மலா, கலைமகள், சுதாகர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கோபாலரட்ணம் மற்றும் பத்மநாதன்(குட்டி), பஞ்சாட்சரம்(பஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராகா, ரஷ்கா, ரவிலக்ஸன், ரவிரஞ்சன், லக்சியா, அபர்னா, அர்ஜின், அர்ச்சனா, அருண்காந், செரின், ரேவன், மகிளினி, அக்சயா, நிஷானி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

கிரியை
Monday, 12 Sep 2022 8:00 AM - 10:00 AM
Mahinda Funerals Wattala 286 Negombo Rd, Wattala 11300

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**யோகன் - மகன்** - Mobile : +447868087523
**மாலதி - மகள்** - Mobile : +447401181704
**ஷாமினி - மகள்** - Mobile : +447306202382
**நவபாரதி - மகன்** - Mobile : +447803768565
**சாந்தா - மருமகள்** - Mobile : +94728455218

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கால்வாயில் சிறுவன் சடலம்; பொலிஸார் தீவிர விசாரணை

நுவரெலியா, செப். 12

சிறிய கால்வாயில் மர்மமான முறையில் உயிரிழந்தார் என்று கூறப்படும் பாடசாலை மாணவனின் மரணம் தொடர்பில், நாவலப்பிட்டி பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹரங்கல தேசிய பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்கும் நாவலப்பிட்டி கிரிமதியாவ பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய அஷேன் மின்சரா என்ற மாணவனே உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவன் தனது வீட்டுக்கு குடிநீர் வரும் நீர் குழாய்களை சீர்செய்வதற்காக வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் வீட்டிலிருந்து அரை கிலோமீற்றர் தொலைவில் உள்ள கால்வாய்க்குச் தனியாகச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் குறித்த சிறுவன் வராததால், சிறுவனின் தாயும் சகோதரனும் தேடினர். இந்நிலையில், சிறுவன் கால்வாயில் சடலமாக கிடப்பதை கண்டு நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அத்துடன், பிரதேசவாசிகளின் உதவியுடன் சிறுவனின் சடலம் நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் அங்கு வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இரத்தினக் கற்களை இனி இணையவழியில் விற்கலாம்!

கொழும்பு, செப். 11

3 ஆயிரம் டொலர்கள் பெறுமதி வரையான இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்களை இணைய வழி மூலம் சர்வதேச சந்தைக்கு விற்பனைக்காக சமர்பிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு வருகை தராமல் பிரதான தபால் நிலையங்கள் ஊடாக சுங்க பிரிவின் தேவையை நிறைவு செய்த பின்னர் தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண இணையத் தளத்துக்குப் பிரவேசித்து தமது தயாரிப்புகளை சந்தைப்படுத்த வர்த்தகர்களால் முடியும்.

இதற்கு முன்னர் 300 டொலர்களை இந்தத் தொகை வரையறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குடும்பச் சண்டையால் மாற்றப்பட்ட அமைச்சு

கொழும்பு, செப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 37 பேர் இராஜாங்க அமைச்சர்களாக கடந்த வியாழக்கிழமை நியமிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்களாவர்.

அன்றைய தினம், வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக டி. வி. சாணக்க நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், பின்னர் அவர் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அமைச்சர்களிடையேயான குடும்பச் சண்டையாலேயே இந்தத் திடீர் பதவி மாற்றம் இடம்பெற்றதாக சுவாரஷ்யமான விடயம் வெளியாகியுள்ளது.

டி. வி. சாணக்க வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். எனினும், அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஆனால், அதன் பின்னரே தனது துறையின் அமைச்சரவை அமைச்சர் மகிந்த அமரவீர என்பதை அவர் உணர்ந்தாராம். ஏனெனில், மகிந்த அமரவீரவின் குடும்பத்துக்கும் சாணக்கவின் குடும்பத்துக்கும் இடையே நீண்ட பகைமை காணப்படுகின்றது - இது கடந்த பல தசாப்த ஆண்டுகளாக நீடிக்கிறது என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் இணைந்து, அதே அமைச்சில் பணியாற்ற முடியாதென இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதன் பின்னரே அவர் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சராக மாற்றப்பட்டார்.

இவர்களின் குடும்ப சண்டையை அறியாததாலேயே ஜனாதிபதி செயலகம் அவருக்கு அந்தத் துறையை ஒதுக்கியதாக அறிய வருகின்றது. (ஐ)

## பொருளாதார...

இரு நாள் உத்தியோகபூர்வ பயண மாக நாட்டுக்கு வந்துள்ள சமந்தா பவர், நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை சந்தித்துப் பேசினார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தப் பேச் சில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் உடனிருந்தார்.

இலங்கையின் பொருளாதார உறுதிப் பாட்டுக்கு முழுமையான ஆதரவை வழங்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயல்படும் என்று அந்த நாட்டின் சர்வ தேச அபிவிருத்தி நிறுவனத்தின் (யு எஸ் எய்ட்) நிர்வாகி சமந்தா பவர் தெரிவித் துள்ளார்.

"விவசாயிகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதற்கு அமெரிக்க அரசாங்கத்திற்கு முதலில் நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். நாட்டில் உள்ள 14,000 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இதன் நன்மை சென்ற டையும்", என்று குறிப்பிட்டார்.

மேலும், 22ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அதனை பாராளுமன்றம் நிறை வேற்றும் வரை காத்திருக்கிறோம். நிர் வாகத்துக்காக முதலாவது அமைச்சரவை கையேடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கமைவாக அமைச்சரவையின் எதிர் கால செயல்பாடுகள் தொடர்பிலான நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கண்காணிப்புக் குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. இதற்கு அமெரிக்காவின் ஆதரவை எதிர்பார்க்கிறோம். பாராளுமன்ற உறுப் பினர்களைத் தவிர, ஐந்து இளைஞர் பிரதி நிதிகள் இவற்றுக்கு நியமிக்கப்படவுள்ள னர். இவர்களுக்கு தலைவர் மூலம் கேள்விகளைக் கேட்க உரிமை உண்டு. உலகில் முதன் முறையாக இவ்வாறான தொரு நடைமுறை முன்னெடுக்கப்பட ருக்கிறது. இளைஞர் பாராளுமன்றத்தை சட்டபூர்வமாக்க இருக்கிறோம். பொரு ளாதாரக் குழுக்களை அதிகரிக்க இருக் கிறோம்.

ஊழலுக்கு எதிரான சட்டங்களுக்கு, நாங்கள் அங்கீகாரம் அளித்துள்ளோம். மேலும், பெண்கள் சமத்துவம் தொடர் பான சட்ட மூலம் ஒன்றை தயாரிக்கு மாறு பெண்கள் அமைப்புகளிடம் கேட்டுள்ளேன். ஓரினச் சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. அரசாங்கம் அதை எதிர்க்காது. இதற்கு தனிப்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும்.

**அரசியல் கைதிகளை விடுவிக்க பொறிமுறை**

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவோர் தொடர்பில் தமிழ் தரப்புடன் பேசினோம். தடுப்புக் காவலில் இருந்த காலம், அவர்கள் அனைவரும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது என்பவற்றை கருத்தில்கொண்டு, அவர் களை விடுவிக்க முடியுமா என்பதை அறிய பொறிமுறை ஒன்றைத் தயாரிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தலதா மாளிகை மீதான குண்டுத்தாக்குதல் மற்றும் சில எம்.பிகளின் கொலைகள் என்பவற்றுடன் தொடர்புபட்டவர்கள் தவிர ஏனையவர்கள் தொடர்பில் இதன் கீழ் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

**ஈஸ்டர் தாக்குதல் விசாரணை சர்வதேச பொலிஸ் உதவி**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக் கூடிய வர்களை அடையாளம் காணுமாறு புல னாய்வு பிரிவுகளுக்கு அறிவித்துள் ளேன். குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, இந்த முழு விவகாரம் தொடர்பில் ஆராய் வதற்கு இங்கு வருமாறு ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னால் மறைகரம் இருந்ததா? அப்படி யானால், அந்த மறைகரம் யாருடையது? சிலர் அமெரிக்கா என்கிறார்கள். சிலர் இந்தியா என்கிறார்கள். இன்னும் சிலர் சீனா என்கிறார்கள். மற்றவர்கள் பாகிஸ் தான் என்கிறார்கள். அதனால் மறைகரம் எதுவென்று யாருக்கும் தெரியாது என் றும் அவர் குறிப்பிட்டார்.

**காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு துரித தீர்வு**

அத்துடன், மேலும் விடுவிக்கக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் குறித்து தீர்வு காண துரிதப்படுத்தப் படும்.

**பொருளாதார மையமாக வடக்கு மாகாணம் மாறும்**

புனரமைப்புத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு துரிதப்படுத்தப்படும். அத்தோடு வடக்கு அபிவிருத்தித் திட் டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம், வடக்கு மாகாணம் பெரும் பொருளாதார மைய மாக மாற்றப்படும். அபிவிருத்திகள் ஊடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைவிட எமக்கு அப்பகுதி களில் அதிகம் பங்காற்ற முடியும் என் றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயத் துறையில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தவும் எதிர் பார்க்கிறோம். 2048 நமது சுதந்திரத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருக்கிறது. அதனையொட்டி 2023இல் இருந்து 25 வருட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதற்கு அமெரிக்காவின் உதவி அவசியமானது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

**6 கோடி டொலர் உதவி**

ஜனாதிபதிக்கு கருத்துத் தெரிவித்த சமந்தா பவர்,

இலங்கைக்கு 60 மில்லியன் அமெ ரிக்க டொலர்களை உதவியாக வழங்கு வதாக உறுதியளித்தார். ஆனால், தற் போது இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் இது மிகமிக சிறிய மற்றும் சாதாரண உதவியாகும். எனினும், இந்த உதவிகள் சர்வதேச நிதி நிறுவனங்களின் தனியார் துறைக்கும், இலங்கையில் புதிதாக முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ள முதலீட்டாளர் களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும், புதிய அணுகுமுறைக்குத் தேவை யான ஓர் உத்வேகமாக அமெரிக்கா இதன்மூலம் செயல்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் அவசர, இடைநிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இலங்கை ஸ்திர நிலைக்குத் திரும்புவதற்கும் ஆதரவளிக்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயல் படும். சுதந்திர மற்றும் திறந்த இந்து-பசுபிக் பிராந்தியத்திற்கான இணைந்த, வளமான -நெகிழ்ச்சியான -பாதுகாப் பான - உறுதியான ஆதவை அமெரிக்கா வழங்கும் சமந்தா பவர் கூறினார். (ஐ)

## 10 அரச...

களில் குறைந்தது 10 நிறுவனங்களை முத லில் விற்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிய வருகின்றது.

இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம், ஜனதா உர எண்டர்பிரைசஸ் லிமிடெட், லங்கா சலு சல லிமிற்றெட், அரச வர்த்தக கூட்டுத் தாபன மொத்த விற்பனை நிறுவனம், லங்கா பேப்ரிக் லிமிற்றெட், நோர்த் சீ லிமிற்றெட், லங்கா செரமிக் கம்பனி, லங்கா சிமெந்து நிறுவனம், சிமெந்து கூட்டுத்தாபனம் உட்பட 10 நிறுவனங் கள் இந்த பட்டியலில் உள்ளடங்கியுள் ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங் களில், மொத்த 55 பெரிய நிறுவனங் களில் 52 நிறுவனங்கள் ரூ. 859 கோடி இழப்பை சந்தித்துள்ளன. 2021ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியில் 1300 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எனவே துரித நடவடிக்கையை மேற் கொண்டு, சிக்கலில் உள்ள அரசு நிறு வனங்களை மறுசீரமைப்பதற்காக புதிய பிரிவை அரசு அமைத்துள்ளது. (ஐ)

# மனித உரிமை பேரவை; 51ஆவது அமர்வு இன்று!

ஜெனிவா, செப். 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையின் 51ஆவது அமர்வு இன்று திங்கட் கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிறது.

இந்த அமர்வில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் இந்த வாரம் பகிரங்கப் படுத்தப்படும் என்றும் அறிய வருகின்றது.

இலங்கை தொடர்பான உத்தேச தீர்மானம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை பிரதி பலிக்கும் என்று கூறப்படுகின்றது. இதன் முதல் அல்லது பூச்சிய வரைவு இன்று அல்லது நாளை சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளது.

உத்தேச தீர்மானம், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்கள் தொடர்பில் 2012ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப் படாத முன்மொழிவுகள் மற்றும் பரிந் துரைகளுடன், இலங்கை குடிமக்களின் உரிமைகள் மீறல் தண்டனை இன்மை யால் இடம்பெற்ற பொருளாதார குற்றங்கள் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

மேலும், இனப் பிரச்னைக்கு தீர்வு காணாமை, காணாமல் ஆக்கப்பட்டோ ருக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் இன்மை, ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்படல், துஷ்பிரயோகம் செய் யப்படல், அவசரகால மற்றும் பயங் கரவாத சட்டங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கத் போன்றவையும் பகுதி களாக இருக்கும்.

புதிய தீர்மானம் அமெரிக்கா, இங்கி லாந்து, கனடா, ஜேர்மனி, மசிடோ னியா, மலாவி நாடுகளால் அனுசரணை செய்யப்படவுள்ளது. இதனிடையே, வரும் வெள்ளிக்கிழமை முறைசாரா அமர்வு கள் ஆரம்பமாகும். அங்கும் இந்த வரைவு விவாதிக்கப்படும். (ஐ)

## திருக்கோணேஸ்...

ஞாயிற்றுக்கிழமை ஆராய்ந்தனர்.

இந்த சந்திப்பில், திருக்கோணேஸ் வரம் ஆலய பரிபாலன சபை பிரதிநிதி கள், யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித் தார்த்தன், சி. சிறிதரன் போன்றோரும் கலந்துகொண்டனர்.

திருக்கோணேஸ்வரம் சைவத் தமிழர் களின் சொத்து என்றும் இதைப் பாது காப்பதற்கு அரசியல்வாதிகள் உட்பட சைவ அமைப்புக்கள் அனைவரும் ஒன் றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாராளு மன்ற வளாகத்தில் கவனவீர்ப்பு போராட் டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆலயம் ஆக்கிரமிக்கப்படுவதை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப் பட்டது. (ஐ)

## ஜனாதிபதியாக...

அவர்களுடன் கடந்த காலங்களில் இடம் பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக அவர் உரையாடினார்.

ரணிலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு இந்தியா ஆட்சேபித்த தக வலை நண்பர்களுடன் உரையாடும் போது பகிர்ந்துள்ளார்.

"சிங்கப்பூரில் தங்கியிருந்தபோது ரணிலை ஜனாதிபதியாக்க வேண்டாம் என்று இந்தியா என்னிடம் கோரிக்கை வைத்தது. சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை அரச தலைவராக நியமிக்குமாறு இந்தியா என்னைக் கேட் டது. இதற்கு அனைத்து கட்சித் தலைவர் களும் பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண் டனர்.

"ஆனால், அங்கு ரணிலை ஜனாதிபதி ஆக்குமாறு பல்வேறு தரப்பினராலும் எனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனது சொந்தக்காரர்கள் என்னிடம் வந்து ரணிலுக்கு ஜனாதிபதி பதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டனர். அதனால், எனக்கு வந்த அழுத்தங்கள் காரணமா கவே ரணிலுக்கு ஜனாதிபதி பதவி வழங் கப்பட்டது. ஆனால், இதன் காரணமாக இந்தியா என் மீது கோபமடைந்தது போன்று உணர்கிறேன்", - என்று கூறி யுள்ளார்.

இதன்படி, கோட்டாபயவின் இந்தக் கூற்றில் ஏதேனும் உண்மை இருக்குமா னால், எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடினமான காலகட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அமெ ரிக்காவும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கை தொடர்பான தீர்மானங்களை இந்தியாவுடன் கையாளத் தொடங்கிய மையே இதற்குக் காரணம் என்று அந்த சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது. (ஐ-சி)

## முடிந்தால்...

நடக்கின்றது எனத் தெரியவில்லை. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதர வாளர்கள், அநாதவராக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காகவே நாம் புதிய அரசியல் சக்தியை உருவாக்கியுள்ளோம். எமது முடிவில் எந்தத் தவறும் இல்லை.

கட்சியை விட்டு எங்களை நீக்கினால் நிச்சயம் நீதிமன்றத்தை நாடுவோம். முடிந்தால் நீக்கிக் காட்டுமாறு சவாலும் விடுக்கின்றோம். ஏனெனில், உண்மை யான சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் நாங்கள்தான். கட்சி களின் தனித்தும் மற்றும் கொள்கைக்காக நாமே முன்னிலையாகியுள்ளோம்" - என் றார். (ஐ)

## ஆசியக்...

மாறி வந்த இலங்கை அணி ஆசியக் கிண் ணத்தை கைப்பற்றியமை ரசிகர்களை மேலும் உற்சாகம் அடைய வைத்துள்ளது. இதேவேளை, நேற்றைய தினம் இலங்கை மகளிர் வலைப்பந்தாட்ட அணியும் ஆசி யக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை இலங் கையர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இலங்கை அணி நிர்ணயித்த 171 ஓட் டங்கள் என்ற இலக்கை துரத்த ஆரம்பித் தது பாகிஸ்தான் அணி. தொடக்கம் கொடுத்த ரிஸ்வான் சிறப்பான ஆரம் பத்தை ஏற்படுத்தினார். ஆனால், அவருக்கு சிறந்த இணைப்பாட்ட வீரர் அமைய வில்லை. மூன்றாவது விக்கெட்டுக்காக அவருடன் இணைந்த இப்திஹார் அஹ மட் 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமி ழந்தார்.

ஆனால், ஏனைய வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்திய ரிஸ் வான் 55 ஓட்டங்களுடன் ஐந்தாவது விக்கெட்டாக வீழ்ந்தார். அதன் பின்னர் மளமளவென்று பாகிஸ்தானின் விக் கெட்கள் சாயத் தொடங்கின.

20 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரமோத் மதுஷான் 4, வனிந்து ஹசரங்க 3, சாமீக கருணாரத்ன 2 விக்கெட்களை கைப்பற்றி னர்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இத னால், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தொடக்கம் கொடுத்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தனர். ஐந்தாவது வீராக களமிறங்கிய பானுக ராஜபக்ஷ பாகிஸ்தான் பந்து வீச்சை அசத்தலாகக் கையாண்டார். அவர் 45 பந்துகளில் 3 சிக்ஸர், 4 பௌண் டரிகளை விளாசி 71 ஓட்டங்களைக் குவித்தார்.

வனிந்து ஹசரங்க ஒரு சிக்ஸர், 5 பௌண்டரிகளுடன் 36, தனஞ்சய டீ சில்வா 28 ஓட்டங்களை அடுத்து அதிக ஓட்டங்களைக் குவித்தனர். இதனால் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 170 ஓட்டங் களை குவித்தது.

இலங்கை அணி ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றுவது இது ஆறாவது தடவை யாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# விவசாய அமைச்சர் கிளிநொச்சி வருகை; பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்றார்!



கிளிநொச்சி, செப். 12

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

இதன்போது அவர், பூநகரியிலுள்ள தெளிகரை குளம் மற்றும் ஈநொச்சி குளத்தை புனரமைக்கும் வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இந்த இரண்டு குளங்களும் உலக வங்கியின் உதவியில் 68.59 மில்லியன் ரூபா செலவில் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியில் 33 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்த அமைச்சர் விவசாயிகளுடனும் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன், கிளிநொச்சி திருவையாறு பகுதியில் ஐம்போ நிலகடலை செய்கை பண்ணப்படும் விவசாய நிலத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

மற்றும் இரணைமடு சந்தியிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துக்கு சென்று நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் உற்பத்திகளை பார்வையிட்டார்.

அத்துடன், அங்கு வேலை செய்பவர்களை சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை தொடர்பாக கேட்டறிந்தார்.

இதன்போது, தாம் நீண்ட நாட்களாக நியமனம் பெறாது இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டில் அனைவருக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர் இதன்போது உறுதியளித்தார். (ஐ)



# 70 இற்கும் மேற்பட்ட யானைகள் சாய்ந்தமருதுக்குள் நுழைந்தன!

கல்முனை, செப். 12

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குள் நுழைந்த சுமார் 70இற்கும் அதிகமான யானைகளை கட்டுப்படுத்தி - அங்கிருந்து வெளியேற்றும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சனிக்கிழமை மாலை முதல் இரவு வரை அந்த யானைகள் நகர்ந்து செல்லாமல் ஓர் இடத்தில் கூடி நிற்கின்றன என்று வனவிலங்கு அதிகாரிகளுக்கு பொதுமக்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது குறித்த யானைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இதற்காக யானைக்கூட்டத்தின் நகர்வுகளை அவதானித்தனர்.

இதனிடையே, யானைக் கூட்டத்தை பார்ப்பதற்காக சம்மாந்துறை வளத்தாபிட்டி பகுதிகளில் பொதுமக்கள் குவிந்தனர்.

இந்தப் பகுதியில் அறுவடையின்போது கொட்டப்படும் வைக்கோலை உண்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் வருகின்றன என்றும், அவை பொது மக்களின் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்துகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 1)

# ஜெனிவாவில் இன்று போராட்டம்; தமிழ் அரசியல்வாதிகள் நடத்துவர்!

ஜெனிவா, செப். 12

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இந்நிலையில், அங்கு நடைபெறவுள்ள பக்க அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ள தமிழ் அரசியல்வாதிகள் போராட்டம் நடத்தவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாணவர் மீட்புப் பேரவையின் தலைவரும் சமூக செயல்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் ஆகியோர் ஜெனிவா சென்றுள்ளனர்.

அவர்கள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, அதற்குச் சமாந்தரமாக இடம்பெற்ற படுகொலைகள், இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் அநீதி, பாரபட்சம், புறக்கணிப்பு பற்றி நாங்கள் பல தடவைகள் கூறியிருந்தோம். அதற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை ஏலவே முன்வைத்து நீதி கேட்டு இருந்தோம். இதுவரைக்கும் அந்த நீதி தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்காக இம்முறை நீதி கோரி ஐ. நா. மனித உரிமைகள் சபையின் மாநாட்டு மண்டபம் முன்பாக இன்று அனைவரும் கூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதேவேளை, பக்க அமர்வுகளில் கலந்துகொண்டு தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும், படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்று ஒருமித்த குரலில் வலியுறுத்தவுள்ளோம். " - என்றனர்.

# மகாராணியின் இறுதி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பார்!

கொழும்பு, செப். 12

மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுக்காக ஜனாதிபதி எதிர்வரும் 17ஆம் திகதி பிரித்தானியா செல்லவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கு கிரேட் பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் கதீட்ரலில் வரும் 19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதேவேளை, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்காக பிரித்தானிய தூதரகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள இரங்கல் குறிப்பேட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் குறிப்பொன்றை பதிந்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மகாராணியின் மறைவுக்கு பிரித்தானிய அரச குடும்பம், அரசாங்கம் மற்றும் மக்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார். (ஐ)

# வெளிநாடு செல்பவர்களில் ஆண்களின் தொகை அதிகம்!

கொழும்பு, செப். 12

வெளிநாட்டுக்கு வேலை தேடி செல்லும் இலங்கையர்களின் தேவை வேகமாக அதிக ரித்து வருகிறது என்று வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 772 இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலைக்காக சென்றுள்ளனர் என்று பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளிநாடு செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர். மேலும் ஒரு இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள் வெளிநாடு சென்றுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரை 2 ஆயிரத்து 858 இலங்கையர்கள் தென்கொரியா வில் வேலைக்காக சென்றுள்ளனர்.

மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 5 ஆயிரம் தொழிலாளர்களை கொரியாவுக்கு வேலைக்கு அனுப்ப எதிர்பார்த்திருப்பதாக பணியகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மக்கள் குரல் போராட்டம் மயிலிட்டியில் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், செப். 12

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் 100 நாள் போராட்டம் நடக்கிறது. இதன், 42ஆவது நாளான நேற்று மயிலிட்டியில் போராட்டம் இடம் பெற்றது.

மயிலிட்டி கடற்கரை துறை முகத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவர் சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

இதன்போது, பொது மக்களால் 100 நாள் செயல்திட்டத்துக்கான பொது மனு வாசிக்கப்பட்டதுடன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக, பாதக விளைவுகள் தொடர்பாக சட்டத்தரணி சிவஸ்கந்த சிறீ தெளிவுபடுத்தலையும் வழங்கினார்.

மேலும் கலந்து கொண்ட மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ கருத்துக்களை வழங்கினார். இதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள் வாங்கப்பட்டன.

இந்தப் போராட்டம் வடக்கு- கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.